ISSN: 2582–5518




புதுகை
# வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




ஞாயிறு ❖ நவம்பர். 05, 2023 | சென்னை & புதுக்கோட்டை | 6 பக்கம் ❖ வரலாறு 9 ❖ இதழ் 33 ❖ ரூ.10




## தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கு வைரஸ் காய்ச்சல்

# ஓய்வு

## காய்ச்சலுக்கான சிகிச்சையோடு, சில நாட்கள் ஓய்வெடுக்கும்படி மருத்துவர்கள் அறிவுறுத்தல்

சென்னை, நவ. 5–

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு வைரல் காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. காய்ச்சலுக்கான சிகிச்சையோடு, சில நாட்கள் ஓய்வெடுக்கும்படியும் அவருக்கு மருத்துவர் அறிவுறுத்தியுள்ளார்.



இது தொடர்பாக முதல்வர் ஸ்டாலினின் தனிப்பட்ட மருத்துவரும், மெட்ராஸ் ENT ஆராய்ச்சி மையத்தின் தலைமை மருத்துவருமான மோகன் காமேஸ்வரன் வெளியிட்டுள்ள மருத்துவ அறிக்கையில், "தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இருமல், காய்ச்சல் அறிகுறிகள் இருந்தன. அதனையடுத்து அவருக்கு மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்நிலையில், அவருக்கு வைரல் ஃப்ளூ காய்ச்சல் உறுதியாகியுள்ளது. இதனால், முதல்வர் காய்ச்சலுக்கான சிகிச்சைகளை மேற்கொள்ளுமாறும், அடுத்த சில நாட்களுக்கு ஓய்வு எடுக்கும்படியும் அறிவுறுத்தப்படுகிறது" எனத் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று காலையில் சென்னை பெசன்ட் நகரில் நடப்போம் நலன் பெறுவோம் என்ற திட்டத்தைதொடக்கிவைக்க இருந்த நிலையில் அந்த நிகழ்ச்சியில் அவருக்குப் பதிலாக அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்றார். அதேபோல் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை தலைமைச் செயலகத்தில் சில நிகழ்ச்சிகளை முதல்வர் ஸ்டாலின் ரத்து செய்ததாகத் தெரிகிறது. இதனால் அவருக்கு உடல்நிலை சரியில்லை என்று கூறப்பட்ட நிலையில் முதல்வர் ஸ்டாலினின் உடல்நிலை குறித்து அதிகாரபூர்வ மருத்துவ அறிக்கை வெளியாகியுள்ளது.

## நடப்போம் – நலம் பெறுவோம் திட்டம் : கொட்டும் மழையில் தொடங்கிவைத்தார் அமைச்சர் உதயநிதி

சென்னை, நவ. 5–

சென்னை பெசன்ட் நகர் கடற்கரை சாலையில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மா.சுப்ரமணியன், சென்னை மேயர் பிரியா ஆகியோர் கொட்டும் மழையில், தமிழக அரசின் 'நடப்போம் - நலம் பெறுவோம்' திட்டத்தை தொடங்கி வைத்து நடைபயிற்சி மேற்கொண்டனர்.



சென்னையில் ஒவ்வொரு நாளும் அதிகரித்து வரும் மக்கள் தொகையும், வியாபார ஸ்தலங்களும் பொது இடங்களை மெல்ல மெல்ல சுருக்கி வருகிறது. இதன் காரணமாக, விளையாட்டு மைதானங்கள் புதியதாக உருவாவதில் சிக்கல்கள் எழுந்திருக்கின்றன.

இது இளைஞர்களுக்கும், முதியவர்களுக்கும், நோயாளிகளுக்கும் நெருக்கடியை உருவாக்கியுள்ளது. இதனை சரி செய்ய சென்னை அடையாறில் இருந்து பெசன்ட் நகர் வரை 8 கிலோ மீட்டர் நீள நடைபாதையை அமைக்க முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டிருந்தார்.

இதனையடுத்து, நடைப்பயிற்சி மேற்கொள்பவர்களின் வசதிக்காக சென்னை அடையாறில் இருந்து பெசன்ட்நகர்வரை8கிலோ மீட்டர் நீள நடைபாதை அமைக்கப்பட்டது. நடப்போம் - நலம் பெறுவோம் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட இந்த நடைபாதையை அமைச்சர் உதயநிதி நேற்று திறந்து வைத்தார்.

இந்த விழாவில் பேசிய உதயநிதி, ''நடப்போம் - நலம் பெறுவோம் என்ற இந்த திட்டம் மிகப்பெரிய மக்கள் இயக்கமாக மாற வேண்டும். இந்த திட்டத்தை அனைவரும் பயன்படுத்தி உடல் நலத்தை பேணி காக்க வேண்டும்'' என்றார்.

முன்னதாக பேசிய அமைச்சர் மா.சுப்பிரமணியன், ''உடற்பயிற்சி என்பது என்றைக்குமே நம்மை பாதுகாக்கும். இளம் வயதினருக்கு மாரடைப்பு போன்றவை வருவதற்கு காரணம் அவர்களிடம் போதிய உடற்பயிற்சி இல்லாததுதான். தமிழகத்தின் 38 மாவட்டங்களிலும் ஹெல்த் வாக் சாலை திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இதற்காக அனைத்து மாவட்டங்களிலும் பிரத்யேக சாலைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அமைக்கப்பட்டுள்ளது. அதனை பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்" என்றார்.

## 20 ஆண்டுகளில் டாஸ்மாக் வருவாய் ரூ.44,000 கோடியாக உயர்வு தீபாவளி போனஸ் மட்டும் உயரவில்லை என ஊழியர்கள் வேதனை

மதுரை, நவ. 5–

தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் (டாஸ்மாக்) மூலம் 5,329 சில்லறை மதுபான விற்பனைக் கடைகள் உள்ளன. இந்தக் கடைகளில் தமிழகம் முழுவதும் 24 ஆயிரம் பேர் தொகுப்பூதியத்தில் பணிபுரிகின்றனர்.

2003–2004–ம் ஆண்டில் டாஸ்மாக் நிறுவனத்தின் ஆண்டு வருவாய் ரூ.3,639 கோடி என்று இருந்தது. கடந்த 20 ஆண்டுகளில் இந்த வருவாய் தற்போது ரூ.44 ஆயிரம் கோடியாக உயர்ந்துள்ளது. ஆனால், டாஸ்மாக் கடைகளில் பணிபுரியும் ஊழியர்களுடைய ஊதியம் உயரவில்லை. தற்போது வரை அவர்கள் குறைந்தபட்ச ஊதியத்தில் பணி நிரந்தரம் செய்யப்படாமல் பணிபுரிகிறார்கள்.

தொடக்கத்தில் 26 ஆயிரம் பேர் வரை பணிபுரிந்துள்ளனர். தற்போது அவர்களில் பலர் மரணமடைந்தும், பணி ஓய்வும் பெற்றுள்ளனர். ஆனால், அந்தப் பணியிடங்கள் நிரப்பப்படாமல் காலியாக உள்ளன. இந்நிலையில், தீபாவளி பண்டிகை நெருங்கிவிட்ட நிலையில் டாஸ்மாக் மதுபானக் கடைகளில் பணிபுரியும் ஊழியர்களுக்கு போனஸ் அறிவிக்கப்படவில்லை.




இதுகுறித்து டாஸ்மாக் கடை ஊழியர்கள் கூறியதாவது: 12 மணி நேரம் பணிபுரிகிறோம். வார விடுமுறை கிடையாது. ஆனால், மற்ற அரசு சார்பு நிறுவனங்களில் பணிபுரிபவர்களைப் போல் எங்களுக்கு ஊதியமும், போனசும் வழங்கப்படுவதில்லை.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் ஊழியர்களுக்கு சம்பளம் என்பது வாரச் சம்பளமாக கொடுக்கப்பட்டு வந்தது. மாதத்துக்கு நான்கு வாரங்கள் அப்படி கணக்கிட்டால் மாதத்துக்கு 28 நாள் சம்பளம்தான் பெற முடிந்தது. ஆண்டுக்கு 52 வாரம் என்ற அடிப்படையில் மறைமுகமாக ஊழியர்களுக்கு மாதத்தில் 2 நாள் சம்பளம் மறுக்கப்பட்டு வந்தது அல்லது கொடுக்கப்படாத ஊதியமாக கருதப்பட்டது.

1935 முதல் நாடு முழுவதும் பண்டிகைகள் கொண்டாட்டத்தையொட்டி தீபாவளி, ஓணம் போன்ற பண்டிகைகளுக்கு மாதந்தோறும் கொடுக்கப்படாத அந்த 2 நாள் ஊதியத்தை போனசாக வழங்க வேண்டும் என்று கோரிக்கை எழுந்தது.

அதன் பிறகு போனஸ் சட்டம் கொண்டு வரப்பட்டு தொழிற்சாலைகளில் வேலை செய்யக்கூடிய ஊழியர்களுக்கு அந்தச் சட்டப்படி லாபத்தில் பங்கு அளிக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது. இந்த போனஸ், லாபத்துக்குத் தகுந்தவாறு, துறைகளுக்கு தகுந்தவாறு மாறுபடும்.

டாஸ்மாக் பணியாளர்களைப் பொருத்தவரை கொரோனா ஆண்டு வரை அதாவது 2018–19 வரை 20 சதவீதம் போனஸ் பெற்று வந்தோம். ஆனால், கடந்த அதிமுக ஆட்சியில் கடைசி ஆண்டும் தற்போது திமுக ஆட்சியிலும் 2022 வரை 10 சதவீதம் மட்டுமே போனஸ் வழங்கப்பட்டது.

கொரோனா மற்றும் நிதி நிலைமையைக் காரணம் காட்டி டாஸ்மாக் பணியாளர்களுக்கு இப்படி போனஸ் குறைக்கப்பட்டது. தற்போது லாபம் ஈட்டக்கூடிய பொதுத் துறைகளுக்கு 20 சதவீதம் போனஸ் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், அதில் டாஸ்மாக் குறிப்பிடப்படவில்லை.

டாஸ்மாக் நிறுவனத்தின் லாபத்தை மறைத்து நஷ்டக்கணக்கு காட்டி எங்களுக்கு கடந்த ஆண்டைப் போலவே 10 சதவீதம் போனஸ் வழங்க வாய்ப்புள்ளது. தமிழக அரசின் மற்ற பொதுத்துறை நிறுவனங்களைப்போல் டாஸ்மாக் துறையும் லாபத்தில்தான் இயங்குகிறது.

எனவே, எங்களுக்கு 30 சதவீதம் முதல் 40 சதவீதம் வரை போனஸ் வழங்க வேண்டும். தீபாவளி நெருங்குகிற வேளையில், இன்னும் டாஸ்மாக் ஊழியர்களுக்கு போனஸ் அறிவிக்கப்படவில்லை என்பது வருத்தமாக உள்ளது என்று அவர்கள் தெரிவித்தனர்.

## பொன்னமராவதி–சேலம் புதிய வழித்தட பேருந்து சேவையினை அமைச்சர் எஸ்.ரகுபதி கொடியசைத்து துவக்கி வைத்தார்

பொன்னமராவதி ,நவ5–

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி பேருந்து நிலையத்தில், பொன்னமராவதி - சேலம் புதிய வழித்தட பேருந்து சேவையினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி நேற்று கொடியசைத்து துவக்கி வைத்தார்.




பின்னர் அவர் தெரிவித்ததாவது; கல்வி முன்னேற்றமும், பெண்களின் வாழ்வாதார முன்னேற்றத்தினை கொண்டே ஒரு நாட்டின் முன்னேற்றம் என்ற அடிப்படையில் தமிழ்நாடு முதலமைச்சர் பல்வேறு சிறப்பான திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். அதன் ஒருபகுதியாக இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாததிட்டமான, நகரப் பேருந்துகளில் மகளிருக்கு இலவச பேருந்து பயணத் திட்டத்தினை தொடங்கி வைத்தார். இதன் மூலம் நாள்தோறும் பல்வேறு பணிகளுக்கு செல்லும் மகளிரின் பொருளாதாரம் மேம்பட்டு வருகிறது.

அந்த வகையில், பொன்னமராவதியில், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக புதுக்கோட்டை மண்டலத்திற்குட்பட்ட பொன்னமராவதி - சேலம் புதிய வழித்தட பேருந்து சேவைகள் இன்றையதினம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. அதன்படி, பொன்னமராவதியிலிருந்து புலவனார்குடி, இடையாத்தூர், இடையப்பட்டி, சடையம்பட்டி, பாலக்குறிச்சி, மணப்பாறை, குளித்தலை, முசிறி, தொட்டியம், நாமக்கல் ஆகிய பகுதிகள் வழியாக நாளொன்றிற்கு சுமார் 2500 பொதுமக்கள் பயன்பெறும் வகையில் புதிய பேருந்து வழித்தட சேவை துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இப்பேருந்து பொன்னமராவதியிலிருந்து மாலை 4 மணிக்கும், சேலத்திலிருந்து இரவு 12.23 மணிக்கும் பேருந்து இயக்கப்படும். எனவே இப்பகுதியில் உள்ள பொதுமக்கள்; அனைவரும் இப்பேருந்து சேவையினை உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்எனதெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் செல்வி, பொன்னமராவதி ஒன்றியக்குழுத் தலைவர் சுதா அடைக்கலமணி, பொன்னமராவதி பேரூராட்சித் தலைவர் சுந்தரி அழகப்பன், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக புதுக்கோட்டை மண்டலபொதுமேலாளர் இளங்கோவன், கோட்ட மேலாளர் (வணிகம்) சுரேஷ், உதவி இயக்குநர் அ.செந்தில், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

## பெண்களுக்கு ரூ.12,000, ரூ.500–க்கு காஸ் சிலிண்டர் : சத்தீஸ்கரில் பாஜக தேர்தல் வாக்குறுதி

ராய்ப்பூர், நவ. 5–

சத்தீஸ்கரில் உள்ள 90 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு வரும் 7 மற்றும் 17–ம் தேதிகளில் இரண்டு கட்டங்களாக தேர்தல் நடைபெறுகிறது.

இந்நிலையில் சத்தீஸ்கரின் குஷாபாவ் தாக்ரே பரிசர் பகுதியில் நடந்த தேர்தல் பிரச்சார கூட்டத்தில், 'மோடியின் 2023–ம் ஆண்டு உத்திரவாதம்' என்ற பெயரில் பாஜக.வின் தேர்தல் அறிக்கையை மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வெளியிட்டார். அதில் கூறியிருப்பதாவது:

திருமணமான பெண்களுக்கு ஆண்டுக்கு ரூ.12,000 நிதி யுதவி அளிக்கப்படும். சத்தீஸ்கரில் 2 ஆண்டுகளில் ஒரு லட்சம் அரசு காலி பணியிடங்கள் நிரப்பப்படும். ஏழை குடும்பத்தை சேர்ந்த பெண்களுக்கு சமையல் காஸ் சிலிண்டர் ரூ.500–க்கு வழங்கப்படும். கல்லூரி செல்லும் மாணவ, மாணவிகளுக்கு, பயணப்படி அவர்களது வங்கி கணக்கில் நேரடியாக செலுத்தப்படும். பிரதமரின் வீட்டு வசதி திட்டத்தின் கீழ் 18 லட்சம் வீடுகள் கட்ட நிதி ஒதுக்கப்படும். ஒவ்வொரு வீட்டுக்கும் 2 ஆண்டுகளில் குடிநீர் குழாய் இணைப்பு வழங்கப்படும். தீன்தயாள் உபாத்யாய் கிரிஷி மஜ்தூர் திட்டத்தின் கீழ் நிலமற்ற விவசாய தொழிலாளர்களுக்கு




ஆண்டுக்கு ரூ.10,000 வழங்கப்படும். கிரிஷி உன்னதி திட்டத்தின் கீழ் விவசாயிகளிடமிருந்து ஏக்கருக்கு 21 குவிண்டால் நெல் தலா ரூ.3,100–க்கு கொள்முதல் செய்யப்படும். அயோத்தியில் ராமர் கோயிலை பார்வையிட மக்கள் அழைத்துச் செல்லப்படுவர். இவ்வாறு தேர்தல் அறிக்கையில் பாஜக தெரிவித்துள்ளது.

சத்தீஸ்கரில் நக்சல் வன்முறையால் பாதிக்கப்பட்ட பஸ்தார் பிராந்தியத்தின் 40 உட்புற கிராமங்களில் முதல் முறையாக வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட உள்ளன. சத்தீஸ்கரில் முதல் கட்ட தேர்தலை சந்திக்கும் 20 தொகுதிகளில் 12 தொகுதிகள் பஸ்தார் பிராந்தியத்தில் உள்ளன. இந்தப் பிராந்தியம் முழுவதும் மாவோயிஸ்ட் ஆதிக்கம் செலுத்தி வந்ததால் இதன் உட்புற பகுதிகளில் வாக்குப்பதிவு நடத்துவது தேர்தல் ஆணையம் மற்றும் பாதுகாப்பு படையினருக்கு மிகப்பெரிய சவாலாக இருந்து வந்தது. இதனால் இந்த கிராமங்களை விட்டு பல கி.மீ. தொலைவில் பாதுகாப்பான இடங்களில் வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டன.

மறுபுறத்தில் மாவோயிஸ்ட் அமைப்புகள் தேர்தலை புறக்கணித்து வந்தன. யார் வாக்களித்தாலும் விரலை வெட்டுவோம் என கிராம மக்களை எச்சரித்து வந்தனர். இதனால் கிராம மக்கள் வாக்களிக்க முடியாமல் தவித்தனர்.

இந்நிலையில் இப்பிராந்தியத்தில் தற்போது சூழ்நிலைகள் மாறியுள்ளன. முன்னெப்போதும் இல்லாத வகையில் இந்த முறை இந்தப் பிராந்தியத்தின் 40 உட்புற கிராமங்களில் 126 வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட உள்ளன. இந்த கிராமங்களில் முதல்முறையாக வாக்குப் பதிவு நடைபெற இருப்பதால் மக்கள் உற்சாகம் அடைந்துள்ளனர்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்







## "அமைதி ஒரு விருப்பமல்ல; அதுதான் ஒரே வழி" குடியரசு துணைத்தலைவர் ஜக்தீப் தன்கர் பேச்சு

புதுடெல்லி : நவ. 5, அமைதி ஒரு விருப்பம் அல்ல என்றும் அதுதான் ஒரே வழி என்றும் குடியரசுத் துணைத் தலைவர் ஜக்தீப் தன்கர் தெரிவித்துள்ளார்.

புதுடெல்லியில் உள்ள மானெக் ஷா மையத்தில் நடைபெற்ற சாணக்யா பாதுகாப்பு உரையாடல்-2023 நிகழ்ச்சியில் குடியரசு துணைத்தலைவர் ஜக்தீப் தன்கர் உரையாற்றினார். அப்போது அவர், உலகளாவிய பாதுகாப்பு மற்றும் அமைதிக்கான சமகாலச் சவால்களை பகுப்பாய்வு செய்வதற்கான இந்தச் சிந்தனை மன்றத்தின் கருத்தாக்கத்துக்காக ராணுவத்தைப் பாராட்டுகிறேன். தெற்காசியா மற்றும் இந்தோ-பசிபிக்கில் உள்ள பாதுகாப்பு சிக்கல்கள் குறித்த ஆழமான பகுப்பாய்வுகளுக்கு இது மிகவும் பொருத்தமான தளம்.

மிகச் சிறந்த ஆன்மிக சிந்தனையாளர்களின் 'கர்மபூமி' இந்தியா. ஆயிரக்கணக்கான ஆண்டுகள் நாகரிக நெறிமுறைகளைக் கொண்டுள்ளது இந்தியா. ஆயுதங்கள் மூலம் நாட்டைப் பாதுகாப்பதும், வேதங்கள் மூலம் அதன் கலாச்சாரத்தை வளர்ப்பதும் இரண்டுமே முக்கியம் எனக் கூறியவர் சாணக்கியர். அன்று




அவர் கூறியது, இன்றும் பொருத்தமாக உள்ளது.

உக்ரைனிலும், மேற்கு ஆசியாவிலும் நடைபெற்று வரும் மோதல்கள் கவலை அளிக்கின்றன. உலகமயமாக்கல் மற்றும் பொருளாதார பரஸ்பர சார்பு இருந்தபோதிலும் இதுபோன்ற மோதல்கள் நிகழ்கின்றன. பொருளாதார உபரிகளை கடின சக்தியாக மாற்றும் நாடுகளின் திறன் முக்கியத்துவம் பெறுகிறது. எனவே, தடுப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்தவும், மிகவும் பயனுள்ள மோதல் தீர்வுக்கான ராஜீயநடவடிக்கைக்குப்புத்துயிர் அளிக்கவும் புதுமையான அணுகுமுறைகளை ஆராய வேண்டியது மிகவும் அவசியம்.

தேசிய பாதுகாப்பு என்பது இன்று எண்ணற்ற பண்புகள் மற்றும் திறன்களின் தொகுப்பாக உள்ளது. ஒரு வலுவான இயக்கத்தை உருவாக்கப் பல்வேறு துண்டுகள் ஒன்றிணைய வேண்டும். தற்போதைய சூழலுக்குப் பொருந்தும் தீர்வுகளைக் கண்டுபிடிப்பது மிகவும் அவசியம். பன்முக அணுகுமுறையின் மூலம் அமைதியை அடைவதற்கும், நிலைநிறுத்துவதற்கும், சிந்தனை, ஆலோசனை, தொடர்பு, இணக்கம், உரையாடல் ஆகியவற்றைஒருங்கிணைப்பது மிகவும் முக்கியம் என குடியரசு துணைத்தலைவர் ஜக்தீப் தன்கர் தெரிவித்தார்.

ராணுவத் தலைமைத் தளபதி மனோஜ் பாண்டே, கடற்படை தளபதி அட்மிரல் ஆர்.ஹரி குமார், விமானப்படை துணைத்தளபதி ஏர் மார்ஷல் ஏ.பி.சிங், நிலப்போர் ஆய்வு மையத்தின் தலைமை இயக்குநர் லெப்டினன்ட் ஜெனரல் பி.எஸ்.ராஜேஸ்வர் (ஓய்வு), ராணுவ துணைத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் எம்.வி.சுசீந்திர குமார், தூதர்கள், உயர்நிலை ஆணையர்கள் இதில் கலந்து கொண்டனர்.

### 'இனிமேல் இதுதான் ஸ்பீடு'

## சென்னையில் வாகனங்களுக்கு வேகக்கட்டுப்பாடு நேற்று முதல் அமல் : போக்குவரத்து காவல்துறை அறிவிப்பு

சென்னை : நவ. 5,

சென்னையில் வேகக்கட்டுப்பாடு நேற்று முதல் அமலுக்கு வந்துள்ளது. சென்னையில் பெருநகரத்தில் சாலைப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக வாகன ஓட்டிகளுக்கு வேக வரம்பை பெருநகர போக்குவரத்து காவல் துறை அறிவித்துள்ளது.

ஆட்டோக்கள் பகல் 7 மணி முதல் 10 மணி வரை மணிக்கு 25 கிலோமீட்டர் வேகத்திலும், இரவு 10 மணி முதல் காலை 7 மணி வரை மணிக்கு 35 கிலோமீட்டர் வேகத்திலும் பயணிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல் கனரக வாகனங்கள் பகலில் மணிக்கு 35 கிலோமீட்டர் வேகத்திலும் இரவில் மணிக்கு 40 கிலோமீட்டர் வேகத்திலும் செல்லலாம். இலகு ரக



வாகனங்கள் மற்றும் இரண்டு சக்கர வாகனங்கள் பகல் 7 மணி முதல் 10 மணி வரை மணிக்கு 40 கிலோமீட்டர் வேகத்திலும், இரவு 10 மணி முதல் காலை 7 மணி வரை மணிக்கு 50 கிலோமீட்டர் வேகத்திலும் பயணிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. இலகுரக வாகனங்கள் அதிகபட்சமாக 60 கிலோமீட்டர் வேகத்திலும், கனரக வாகனங்கள் அதிகபட்சமாக 50 கிலோமீட்டர் வேகத்திலும் செல்ல வேண்டும், இரண்டு சக்கர வாகனங்கள் மணிக்கு 50 கிலோமீட்டர் வேகத்திலேயே செல்லவேண்டும். ஆட்டோக்கள் 40 கிலோமீட்டர் வேகத்தில் பயணிக்க வேண்டும்.

குறிப்பாக குடியிருப்பு பகுதிகளில் அனைத்து வகையான வாகனங்களும் மணிக்கு 30 கிலோமீட்டர் வேகத்தில் மட்டுமே செல்ல வேண்டுமென போக்குவரத்து காவல்துறை அறிவுறுத்தியுள்ளது. இந்நிலையில் சென்னையில் வேகக்கட்டுப்பாடு நேற்று முதல் அமலுக்கு வந்தது. சென்னை மாநகர காவல்துறை தெரிவித்துள்ள நிலையில் வேகவரம்பை மீறி செல்லும், இருசக்கர வாகனங்கள் உள்ளிட்ட இலகுரக வாகனங்களுக்கு 1,000 அபராதம் கனரக வாகனங்களுக்கு 2000 அபராதம் விதிக்கப்படும் என்று காவல்துறை தெரிவித்துள்ளது.




## சென்னையில் மழைக்கு பதறும் காலம் மாறிவிட்டது : திமுக ஆட்சியே காரணம்

### முதல்வர் ஸ்டாலின் பெருமிதம்

சென்னை : நவ. 5, சென்னையில் மழை என்றதுமே வெள்ளம் வருமோ என்று பதறும் காலம் மாறிவிட்டது. திமுக ஆட்சிப் பொறுப்பேற்றதும் மேற்கொண்ட பணிகளே அதற்குக்காரணம்என்றுதமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், "சென்னையில் மழை என்றதுமே வெள்ளம் வருமோ என்று பதறும் காலம் மாறிவிட்டது. திமுக ஆட்சிப் பொறுப்பேற்றதும் மேற்கொண்ட பணிகளே அதற்குக் காரணம். தூர்வாருதல், புதிதாக 876 கி.மீ.க்கு மழைநீர் வடிகால் அமைத்தது உள்ளிட்ட நமது அரசின் செயல்பாடுகளால் கனமழையின் தாக்கம் மக்களைப் பாதிக்காதவாறு தடுக்கப்பட்டுள்ளது.

அடுத்த சில நாட்களுக்குக் கனமழை பெய்யும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள நிலையில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், பெருநகர மாநகராட்சி உயர் அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் என அனைவரும் களத்தில் மக்களுக்குத் துணை நின்று பணியாற்றிடவும். மக்களுக்குச் சிறு இன்னல் கூட ஏற்படாமல் தடுக்க திராவிட மாடல் அரசு இருக்கிறது என்ற நம்பிக்கையை மேலும் வலுப்படுத்திடுவோம்" என்று பதிவிட்டுள்ளார்.

தமிழகத்தில் கடந்த அக்.21-ம் தேதி வடகிழக்கு பருவமழை தொடங்கியது. இதனால், பரவலாக தமிழகம்



முழுவதும் மழைபெய்து வருகிறது. சென்னையிலும், அவ்வப்போது மழை பெய்து வந்தாலும், வியாழக்கிழமை இரவு முதல் தொடர்ந்து விட்டுவிட்டு மிதமானது முதல் கனமழை வரை பெய்து வருகிறது.

தென்மேற்கு மற்றும் அதையொட்டிய மத்திய மேற்கு வங்கக்கடல் பகுதியில் நிலவும் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக தமிழ்நாடு, புதுச்சேரி மாநிலங்களில் நேற்று முதல் நாளை வரை பெரும்பாலான இடங்களிலும், வரும் 7, 8-ம் தேதிகளில் சில இடங்களிலும் இடி, மின்னலுடன் கூடிய, லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். வரும் 9-ம் தேதி சில இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

இன்று கோவை மாவட்ட மலைப் பகுதிகள், நீலகிரி, கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, ராமநாதபுரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, சிவகங்கை, மதுரை, விருதுநகர், திருப்பூர், ஈரோடு, தென்காசி, தேனி, திண்டுக்கல் மாவட்டங்கள் மற்றும் காரைக்காலில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## தென்காசியில், நடப்போம் நலம் பெறுவோம் நடை பயிற்சியினை மாவட்ட ஆட்சியர் தொடங்கி வைத்தார்

தென்காசி, நவ5-

தமிழக முதல்வர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் நடப்போம் நலம் பெறுவோம் என்கிற திட்டத்தை தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் 8 கிமீ தூரம் கொண்ட சுகாதார நடை பாதை கண்டறியப்பட்டு, தினசரி நடை பயிற்சியை மேற்கொள்பவர்களை ஊக்குவிக்கும் வகையில் இந்த மாதம் முதல் ஞாயிறுக்கிழமை நடைபெறும் என அறிவித்தார்.

அதன்படி நேற்று தமிழகம் முழுவதும் உள்ள 38 மாவட்டங்களில் நடப்போம் நலம் பெறுவோம் எனும் திட்டத்தை விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் துவக்கி வைத்தார், அதன் ஒரு பகுதியாக தென்காசி மாவட்டம், மேலகரம் பேரூராட்சிக்கு உட்பட்ட மின் நகர் பகுதியில்



துவங்கி காசிமேஜர்புரம், இலஞ்சி திருவிலஞ்சி குமாரசாமி கோவில் சுற்றுப்பாதை வழியாக 8 கிலோமீட்டர் நடைப்பயணம் நடக்கும் திட்டத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் துரை. ரவிச்சந்திரன் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுரேஷ்குமார், பாராளுமன்ற உறுப்பினர் தனுஷ்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் பழனி நாடார், ராஜா மற்றும் மருத்துவ துறையின் இணை இயக்குனர் முரளிசங்கர், தி.மு.க தெற்கு மாவட்ட பொறுப்பாளர் ஜெயபாலன், மாவட்ட பஞ்சாயத்து துணைத் தலைவர் உதய கிருஷ்ணன், நகர்மன்ற தலைவர் சாதிர், அரசு வழக்கறிஞர் வேலுச்சாமி, தென்காசி ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் ஷேக் அப்துல்லா, காங்கிரஸ் நகர தலைவர் மாடசாமி ஜோதிடர், பெருமாள், சந்தோஷ், ஈஸ்வரன், சித்திக், தேவராஜன், சுப்பிர மணியன் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்டோர் நடைப் பயிற்சியை மேற்கொண்டனர்.

### அபாய கட்டத்தில் காற்றின் தரம்

## மாசுபாட்டை கண்காணிக்க 500 குழுக்கள் அமைத்தது டெல்லி மாநகராட்சி

டெல்லி : நவ. 5, தேசிய தலைநகர் டெல்லியின்பல்வேறு பகுதிகளில் நேற்று காற்றின் தரம் மிகவும் மோசமானதாக மாறியிருப்பதாக மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் தெரிவித்துள்ளது. தரவுகளின் படி, ஆனந்த் விகாரில் காற்றின் தரக் குறியீடு 448 ஆகவும், ஜஹாங்கீர்புரியில் 421 ஆகவும், துவாரகாவில் 435 ஆகவும், இந்திராகாந்தி சர்வதேச விமான நிலையப்பகுதியில் 421 ஆகவும் இருந்தது.

காற்றின் தரக்குறியீடு 0 - 50 வரை இருந்தால் காற்றின் தரம் நல்ல நிலையில் இருக்கிறது. 51 - 100 வரை இருந்தால் திருப்திகரமாக இருக்கிறது. 101 - 200 வரை இருந்தால் சற்று மிதமாக இருக்கிறது. 201 - 300 வரை இருந்தால் இறுக்கமாக இருக்கிறது. 301 -400 வரை இருந்தால் மிகவும் இறுக்கமாக இருக்கிறது. 401 -500 வரை இருந்தால் கடுமையானதாக இருக்கிறது. 500க்கு மேல் இருந்தால் மிகவும் கடுமையானதாக இருக்கிறது

இதனிடையே, டெல்லி மாநகராட்சி, அதன் குளிர்கால செயல்திட்டத்தின் கீழ், திறந்தவெளியில் கழிவுகளை எரித்தல், சட்டவிரோதமான கட்டிடங்கள் கட்டுதல் மற்றும் இடித்தல், சாலைகளில் குப்பைகளைக் கொட்டுதல்



போன்றவைகளை கண்காணித்துக் கட்டுப்படுத்த 1,119 அதிகாரிகள் அடங்கிய 517 குழுக்களை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அமைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேபோல், காற்றுத்தர மேலாண்மை ஆணையம் வழங்கியுள்ள வழிகாட்டுதல்களை அமல்படுத்த வேண்டும் என்றும் மண்டல அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

டெல்லியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை 24 மணி நேரத்துக்கான சராசரி காற்றின் தரக்குறியீடு மிகவும் கடுமையான நிலையில் இருந்தது. இது டெல்லி மற்றும் அதன் சுற்றுப்புறப்பகுதிகளில் காற்று மாசுகளை ஏற்படுத்தும் லாரி, வணிக ரீதியிலான நான்கு சக்கர வாகன போக்குவரத்து, அனைத்து வகையான கட்டுமான பணிகளை தடை செய்தல் என்ற அவசர நிலையை அமல்படுத்துவதற்கு சமமானது.

தேசிய தலைநகரில் கடந்த 2021-ம் ஆண்டு நவ.21-ம் தேதிக்கு பின்னர் சராசரி காற்றின் தரம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை 471 என்ற மிகவும் கடுமையான நிலையை எட்டியுள்ளது.

தேசிய தலைநகர் பகுதிகளில் தொடர்ந்து 5-வது நாளாக கடுமையான மற்றும் அடர்த்தியான பனிப்பொழிவு நிலவியதால் பி.எம். 2.5 நுண்ணியதுகள்களின் அடர்த்தி சுவாச மண்டலத்தை ஊடுருவி நோய்களை ஏற்படுத்தும் அளவுக்கு அதிகரித்திருந்தது. அதாவது ஒரு கனசதுர மீட்டருக்கு 60 மைக்ரோ கிராம் என்ற பாதுகாப்பான அளவை விட 7, 8 மடங்கு அதிகமாக இருந்தது.

இந்த நிலையில் டெல்லி பகுதிகளில் காற்று சுத்திகரிப்பான் மற்றும் முகக்கவசத்துக்கான தேவைகள் அதிகரித்திருப்பதாக வணிகர்கள் தெரிவித்துள்ளனர். கடந்த ஒருவாரத்தில் மாலை 4 மணி பதிவு படி தேசிய தலைநகர் டெல்லியின் 24 மணி நேரத்துக்கான சராசரி காற்றுத் தரக்குறியீடு வியாழக்கிழமை 392, புதன்கிழமை 364, செவ்வாய்க்கிழமை 359, திங்கள்கிழமை 347, கடந்த ஞாயிற்றுக்கிழமை 325, சனிக்கிழமை 304, வெள்ளிக்கிழமை 261 ஆக இருந்தது குறிப்பிடத்தக்கது.

## அரியலூர் மாவட்டத்தில் நடப்போம் நலம்பெறுவோம் நடை பயிற்சியினை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்

அரியலூர், நவ.5-

அரியலூர் மாவட்ட விளையாட்டு அரங்கில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் "நடப்போம் நலம் பெறுவோம்" என்ற நடை பயிற்சியினை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் நேற்று துவக்கி வைத்து, பொதுமக்களுடன் நடைபயிற்சியினை மேற்கொண்டார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஜா.ஆனிமேரி ஸ்வர்ணா, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவிற்கிணங்க, பொதுமக்களிடையே நடை பழக்கத்தை ஊக்குவித்து உடல் நலத்தை மேம்படுத்திட "நடப்போம் நலம் பெறுவோம்" என்றநடைபயிற்சிதிட்டத்தினை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சென்னையில் நேற்று துவக்கி வைத்தார், அதன் தொடர்ச்சியாக, தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் நடப்போம் நலம்பெறுவோம் நடை பயிற்சி திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அந்தவகையில் அரியலூர் மாவட்டத்தில் "நடப்போம் நலம் பெறுவோம்" சுகாதார திட்டத்தின் படி 8 கிலோமீட்டர் தூரம் உள்ள நடைபயிற்சி பாதை கண்டறியப்பட்டு, அதன்படி நடப்போம் நலம்பெறுவோம் நடை பயிற்சியானது அரியலூர் மாவட்ட விளையாட்டு அரங்கிலிருந்துபோக்குவரத்துத் துறை அமைச்சரால் துவக்கி



வைக்கப்பட்டது.

உலக சுகாதார அமைப்பு ஆய்வுகளின் படி எட்டு கிலோமீட்டர் தூரம் நடப்பதால் நீரழிவு மற்றும் ரத்த அழுத்த நோய் 28 சதவீதம், இதய நோய் தாக்கம்30சதவீதம்குறைவாகிறது என்று தெரியவந்துள்ளது. ஆகவே, நடைபயிற்சி செய்து சுறுசுறுப்பாகவும், ஆரோக்கியமான உடல் நலம் காக்கும் வகையில், அரியலூர் நகரத்தில்மாவட்ட விளையாட்டு அரங்கத்தில் துவங்கி கல்லூரி சாலை வழியாக பல்லேரி, அரசு மருத்துவமனைச் சாலை வழியாக பென்னி ஹவுஸ் தெருவில் இருந்து பெரம்பலூர் சாலை, சத்திரம,; நகராட்சி நூலகம், தேரடி வழியாக அரசு மேல்நிலைப்பள்ளி செட்டி ஏரி வழியாக ஜெயங்கொண்டம் சாலையில் அரசு பல்துறை அலுவலக கட்டிடம் வரை நான்கு கிலோ மீட்டர் தூரமும் அங்கிருந்து திரும்பி மீண்டும் அதே வழியில் மாவட்ட விளையாட்டு அரங்கத்தை அடைந்து எட்டு கிலோமீட்டர் தூரம் நடை பயணத்தை நிறைவு செய்யும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று ஒவ்வொரு மாதமும் முதல் ஞாயிற்றுக்கிழமை அன்று மாவட்ட அரசு அலுவலர்கள் இதில் கலந்து கொள்ள உள்ளார்கள். மேலும், நடைப்பயிற்சி செல்பவர்களுக்கு துவக்க இடம் மற்றும் இடையிடையே மருத்துவக் குழுவினர் முகாம் அமைக்கப்பட்டு அவர்கள் உடல்நலம் பரிசோதனை மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. மேலும், இப்பயண வழியில் ஒரு கிலோமீட்டருக்கு ஓரிடத்தில் இளைப்பாறும் இடமும், குடிதண்ணீர் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதனை பொதுமக்கள் முறையாக பயன்படுத்தி உடல்நலம் காக்குமாறும், தினமும் நடைபயிற்சிமேற்கொள்பவர்கள் இத்தடத்தினை பயன்படுத்திக்கொண்டு தங்களது உடல் நலத்தினை மேம்படுத்தி கொள்ள வேண்டும் என போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.அஜித்தா, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் விஜயலட்சுமி, அரியலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.முத்துக்கிருஷ்ணன், மாவட்ட இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அலுவலர் லெனின், நகர்மன்ற துணைத்தலைவர் கலியமூர்த்தி, அரியலூர் வட்டாட்சியர் ஆனந்தவேல், அரசு அலுவலர்கள், நகர்மன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



புதுவை அரசு காரைக்கால் மாவட்டத்தில் கடந்த மாதம் 27-ஆம் தேதி முதல் டிசம்பர் 9- ஆம் தேதி வரை வரைவு வாக்காளர் பட்டியல் சுருக்குமுறை திருத்தப்பணி நடைபெற்று வரும் நிலையில் வாக்காளர் பட்டியல் பார்வையாளராக நியமிக்கப்பட்டுள்ள மணிகண்டன் தலைமையிலும் மாவட்ட தேர்தல் அதிகாரி .குலோத்துங்கன் முன்னிலையிலும் அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநில கட்சிகளின் பிரதிநிதிகளுடன் ஆட்சியர் வளாகத்தில் வாக்காளர் பட்டியல் திருத்தம் சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் மற்றும் கருத்து கேட்பு கூட்டம் நடைபெற்றது. இதில் அரசியல் கட்சி தலைவர்களின் கருத்துக்களை கேட்டறிந்தார். இந்நிகழ்வில் வாக்காளர் பதிவு அதிகாரிகள் ஜான்சன் மற்றும் சச்சிதானந்தம் துணை மாவட்ட தேர்தல் அதிகாரி செந்தில்நாதன் மற்றும் உதவி வாக்காளர் பதிவு அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

### புதுக்கோட்டை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில் காலியாக உள்ள

## இரண்டு வட்டார ஒருங்கிணைப்பாளர் பணியிடங்களுக்கு விண்ணப்பிக்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது

புதுக்கோட்டை , நவ.5-

மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யா,வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:

புதுக்கோட்டை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில் தூய்மை பாரத இயக்கத்தின் (ஊரகம்) கீழ் காலியாக உள்ள மாவட்ட ஒருங்கிணைப்பாளர், ஊராட்சி ஒன்றியங்களில் காலியாக உள்ள இரண்டு வட்டார ஒருங்கிணைப்பாளர் பணியிடங்களைபூர்த்திசெய்திட தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இப்பணியிடங்களுக்கான தகுதி மற்றும் அனுமதிக்கப்படும் மாதாந்திர தொகுப்பூதியம் விபரம் பின்வருமாறு.

மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பணியிடம் எண்ணிக்கை-1. தகுதிகள், ஏதேனும் ஒரு பட்டப்படிப்பு, அடிப்படை கணினி அறிவு, களப் பணியில் குறைந்தபட்சம் 5 வருட அனுபவம். அனுமதிக்கப்படும் மாதாந்திர தொகுப்பூதியம் ரூ.35,000 ஆகும். வட்டார ஒருங்கிணைப்பாளர் பணயிடங்கள் எண்ணிக்கை-2. தகுதிகள் 12ஆம் வகுப்பு தேர்ச்சி, அடிப்படை கணினி அறிவு, களப் பணியில் குறைந்தபட்சம்3வருட அனுபவம். அனுமதிக்கப்படும் மாதாந்திர தொகுப்பூதியம் ரூ.25,000 ஆகும். விண்ணப்பங்கள் 15.11.2023 மாலை 5 மணி வரை புதுக்கோட்டை மாவட்ட ஊரக வளர்ச்சிமுகமைஅலுவலகத்தில் நேரிலோ அல்லது அஞ்சல் மூலமோ பெறப்படும் மேற்கண்ட பணியிடங்களுக்கு புதுக்கோட்டை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில் தகுதியானவர்கள் தேர்வு செய்யப்பட்டு நடப்பில் உள்ள நிலையான வெளி முகமை நடைமுறைகளில் அடிப்படையில் பயன்படுத்தி கொள்ளப்படுவர்.

# இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி 2024-ம் ஆண்டு வாக்காளர் சிறப்பு முகாம்

சென்னை , நவ,5

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி 2024-ம் ஆண்டு ஜனவரி முதல் தேதியை தகுதி பெறும் தேதியாக கொண்டு 18 வயது பூர்த்தியாக உள்ளவர்களும், புதிய வாக்காளர் இதற்கு விண்ணப்பிக்கலாம் எனவும் வாக்காளர் சிறப்பு முகாம் சென்னை திருவொற்றியூர் காலடிப்பேட்டை பகுதியில் உள்ள செண்ட் பால்ஸ் மேல்நிலைப்பள்ளி மற்றும் திருவொற்றியூர் அரசு கல்லூரி நடைபெறும் வாக்குச்சாவடி மையங்களில் வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு சிறப்பு முகாம் நடைபெறுகிறது.



முகாம்களை வடசென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளரும் மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் சுதர்சனம் எம்எல்ஏ மற்றும் திருவொற்றியூர் மாநகராட்சி 1 வது மண்டல குழு தலைவர் தி.மு தனியரசு பார்வையிட்டு புதியதாக விண்ணப்பிக்கும் வாக்காளர்களிடம் தகவல்களை கேட்டறிந்தனர். வாக்காளர் முகாம் குறித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வு அளித்து அனைவரும் பயன்படுத்தி கொள்ள அறிவுறுத்தினர்.

மாவட்ட அவைத் தலைவர் குறிஞ்சி கணேசன், பகுதி அவைத்தலைவர் ஆசைதம்பி, பகுதி துணை தலைவர் ஆர் எஸ். சம்பத், வட்ட செயலாளர் கேபிள் டி.வி ராஜா, 13 வது வார்டு மாமன்ற உறுப்பினர் சுசிலா ராஜா, 12 வார்டு வட்ட செயலாளர் க. வீ.சதிஷ் குமார், ராஜீ, நிர்வாகிகள் மனோகரன், சுந்தரராஜன், பசுபதி, சைலஸ் ராஜினி பாபு, மதிவண்ணன், துரை ராஜ், ஜானகிராமன், பாலமுருகன் பிரசாத் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.






▶ சென்னையில் நடைபெறும் ஐ எஸ் எல் கால்பந்து போட்டி குறித்து பத்திரிக்கையாளர் சந்திப்பு சென்னை ஹயாத் ரிஜன்சி ஒட்டலில் நேற்று நடந்தது ,இதில் சென்னையின் எப் சி அணியின் பயிற்சி யாளர் ஒவன்கோயல்,வீரர் ரபெல்கிருவலாரோ ஆகியோர்கலந்து கொண்டு இன்று சென்னை நேரு விளையாட்டு மைதானதில் நடைபெறும் சென்னையின் எப் சி அணி கோவா எப் சி அணி மோதும் போட்டி குறித்து பேசினர் மேலும் இந்த போட்டி உள்ளூரில் விளையாடுவதால் கண்டிப்பாக வெற்றி பெறுவோம் என்று தெரிவித்தனர்.

# தருமபுரம் ஆதீன ஜென்ம நட்சத்திர விழா திருக்கடையூர் கோவிலில் சிறப்பு பூஜை





திருக்கடையூர்- நவ- 05:

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுக்கா, திருக்கடையூரில் தருமபுரம் ஆதீனத்திற்கு சொந்தமான அபிராமி சமேத அமிர்தகடேஸ்வரர் கோவில் அமைந்துள்ளது. தேவார பாடல் பெற்ற இத்தலத்தில் சுவாமி கால சம்ஹார மூர்த்தியாக எழுந்தருளி எமனை வதம் செய்ததால் அட்ட வீரட்ட தலங்களில் ஒன்றாக திகழ்ந்து வருகிறது. இத்தலத்தில் சிறப்பு பூஜைகள் செய்து சுவாமியை வழிபட்டால் நீண்ட ஆயுள் கிடைக்கும் என்பது ஐதீகம்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த கோவிலுக்கு ஜென்ம நட்சத்திர தினமான நேற்று காலை 7 மணிக்கு தருமபுரம் ஆதீனம் 27-வது குருமகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரியார் சுவாமிகள் வருகை தந்தார். அவரை பூரண கும்பம் மரியாதை கொடுத்து வரவேற்றனர்.

கோவிலுக்குள் சென்ற தருமபுரம் ஆதீனம் குருமகா சன்னிதானம் கோபூஜை, கஜ பூஜை செய்தார். தொடர்ந்து கோவில் சங்கு மண்டபத்தில் கால சம்ஹார மூர்த்தியை எழுந்தருள செய்து 16 கலசங்கள் மற்றும் 108 சங்குகள் வைக்கப்பட்டு கணபதி, நவகிரக, ஆயுஷ், தன்வந்திரி, சுதர்சன மகாலட்சுமி, அஷ்டலட்சுமி, நட்சத்திர சாந்தி ஹோமங்கள் செய்யப்பட்டு ருத்ராபிஷேகம் நடத்தப்பட்டது.

தொடர்ந்து குருமகா சன்னிதானத்திற்குதட்சிணாமூர்த்தி சன்னதியில் கலாசபிஷேகம் மற்றும் தீபாராதனை செய்து வைக்கப்பட்டது. தொடர்ந்து தருமபுரம் ஆதீன குரு மகா சன்னிதானம் கள்ள விநாயகர், சுவாமி, ஸ்ரீ அபிராமி மற்றும் கால சம்ஹார மூர்த்தி சன்னதிகளில் சிறப்பு வழிபாடு நடத்தினார். பின்னர் குரு மகா சன்னிதானம் திருக்கடையூர் கோவில் தேவஸ்தான சிப்பந்திகளுக்கு அடையாள அட்டை மற்றும் சீருடைகளை வழங்கியதுடன், கோவில் வளாகத்தில் ரோட்டரி சங்கம் சார்பில் அமைக்கப்பட்டுள்ள அர்ச்சனை ரசீது வழங்கும் அறையை திறந்து வைத்தார்.

பூஜைகளை ராமலிங்கம், கணேச குருக்கள் குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியார்கள் செய்து வைத்தனர். இந்நிகழ்ச்சியில் தருமபுரம் ஆதீன கட்டளை தம்பிரான்கள், தருமபுரம் ஆதீன தலைமை பொது மேலாளர் ரங்கராஜன், ஆதீன கோவில் தலைமை கண்காணிப்பாளர் மணி, ஸ்கந்த குரு பாடசாலை நிறுவனர் திருப்பரங்குன்றம் ஸ்ரீலஸ்ரீ ராஜா பட்டர், மருத்துவர் செல்வம், கல்வி செயல்பாடு ஊக்கவியலாளரும், ரோட்டரியன் பேஸ்.ராமன், ஆடிட்டர் குரு சம்பத்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.

# சீர்காழியில் அரிசி கடையின் ஷட்டரை உடைத்து கல்லா பெட்டி மேஜையை தூக்கிச் சென்ற திருடர்கள்

## ரூ.95 ஆயிரம் ரொக்கம் திருட்டு



சீர்காழி,நவ் 5

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி மேல மாரியம்மன் கோவில் தெருவை சேர்ந்தவர் சேகர் (60 ). இவர் சீர்காழி புதிய பேருந்து நிலையம் அருகே திட்டை செல்லும் சாலையில் அரிசி கடை நடத்தி வருகிறார்.

நேற்றிரவு வழக்கம்போல் கடையை பூட்டிவிட்டு சென்றவர், இன்று காலை கடையை திறக்க வந்த போது கடையின் ஷட்டர் பூட்டுகள் உடைக்கப்பட்டு ஷட்டர் பாதி திறக்கப்பட்டிருந்தது.

உள்ளே சென்று சேகர் பார்த்தபோது பணம் வைத்திருக்கும் கல்லாப்பெட்டி மேஜை காணாமல் போனது பார்த்து திடுக்கிட்டார். அப்போது பணம் வைத்திருந்த கல்லாப்பெட்டி மேஜை சுமார் 200 மீட்டர் தூரத்தில் எதிரே உள்ள கட்டுமான பணி நடைபெறும் கட்டடம் அருகே



கிடந்தது.

அதில் வைத்திருந்த ரூபாய் 95 ஆயிரம் பணம் திருட்டு போனது கண்டு சேகர் அதிர்ச்சியடைந்தார். இது குறித்து சீர்காழி காவல் நிலையத்தில் புகார் அளித்தார். இன்ஸ்பெக்டர் சிவகுமார் மற்றும் போலீசார் விரைந்து சென்று திருட்டு சம்பவம் குறித்து தீவிரமாக விசாரணை நடத்தி வருகின்றனர்.

பிரதான பகுதியில் காவல் நிலையத்திலிருந்து சில மீட்டர் தூரத்தில் உள்ள கடையில் ஷட்டரை உடைத்து கல்லாப்பெட்டி மேஜையை தூக்கிச் சென்ற சம்பவம் வணிகர்களிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# திருக்கடையூர் ஊராட்சி ஒன்றியத்தில் வாக்காளர் பட்டியலை எம்எல்ஏ நிவேதா முருகன் ஆய்வு



திருக்கடையூர், நவ- 05;

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி தாலுகா திருக்கடையூரில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலை பள்ளியில் வாக்காளர் வரைவு பட்டியல் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. சிறப்பு முகாமில் பட்டியல் சரிபார்த்து பெயர் சேர்த்தல் பெயர் நீக்குதல் திருத்தம் உள்ளிட்டவைகளுக்கு மனு கொடுக்கப்பட்டது.

சிறப்பு முகாமில் பார்வையிட வந்த மயிலாடுதுறை மாவட்ட திமுக செயலாளரும், பூம்புகார் தொகுதி சட்டமன்ற உறுப்பினரிமான நிவேதா எம் முருகன் திருக்கடையூர் ஊராட்சியில் மற்றும் சுற்றுப்பகுதியில் உள்ள பூத் கமிட்டி உறுப்பினர்கள் சிறப்பாக பணியாற்றுகிறார்களா என்று கேட்டு அறிந்து அவர்களுக்கு பொதுமக்களிடம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் அவர்களுக்கு எந்தெந்தவாறு சில அரசியல் மற்றும் தேர்தல் குறித்த ஆலோசனைகளை வழங்கினார்.

இதில் தஞ்சை மண்டல திமுக தகவல் தொழில்நுட்ப அணி பொறுப்பாளர் பி எம் ஸ்ரீதர், ஒன்றிய செயலாளர்கள் அமுர்த. விஜயகுமார், எம் அப்துல் மாலிக், ஒன்றிய துணைத் தலைவர் மைனர் பாஸ்கர், ஊராட்சி மன்றம் தலைவர் ஜெயமாலதி சிவராஜ், விவசாய அணி மாவட்டத் துணை அமைப்பாளர் இரா செந்தில், உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

# நீட் விலக்கு நம் இலக்கு இந்தியா கூட்டணி கட்சி நிர்வாகிகளுடன் ஒரு நாள் கையெழுத்து இயக்கம்

சென்னை, நவ,5

நீட் தேர்வை ரத்து செய்யக்கோரி தமிழகம் முழுவதும் திமுக சார்பில் கையெழுத்து இயக்கம் தொடங்கப்பட்டுள்ளது. நீட் தேர்வுக்கு எதிராக நீட் விலக்கு நம் இலக்கு என்ற தலைப்பில் திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கேபி சங்கர் தலைமையில் ஒரு நாள் கையெழுத்து இயக்கம் நடைபெற்றது.



திருவொற்றியூர் விம்கோநகர் மார்க்கெட் பகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் காங்கிரஸ் கம்யூனிஸ்ட் விசிக மதிமுக உள்ளிட்ட கூட்டணி கட்சி நிர்வாகிகள் மாமன்ற உறுப்பினர்கள் பங்கேற்று நீட் தேர்வுக்கு எதிராக ஒன்றிய அரசை கண்டித்து கோஷங்களை எழுப்பினர்.

இதனை அடுத்து பொதுமக்களிடமும் பேருந்து பயன்களிடமும் நீட் தேர்வினால் ஏற்படும் பாதிப்புகள் நீட் விலக்கை ஏன் ஆதரிக்கும் வேண்டும் என்பது குறித்து துண்டு பிரசுரங்களை சட்டமன்ற உறுப்பினர் வழங்கினார்.

காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை ஒரு நாள் கையெழுத்தை இயக்கம் நடைபெறும் நிலையில் துப்புரவு பணியாளர்கள் பொதுமக்கள் இளைஞர்கள் என ஆர்வமுடன் போட்டி போட்டு கையெழுத்து யிட்டு பெட்டியில் போட்டனர் இதன்படி 50 நாட்களில் 50 லட்சம் கையெழுத்துகளைப் பெறும் வகையில் இந்த கையெழுத்து இயக்கம் நடத்தப்படுகிறது. டிஜிட்டலாக பெறப்படும் கையெழுத்துகள் சேலத்தில் நடைபெறவுள்ள திமுக இளைஞர் அணியின் மாநாட்டில் முதல்வரிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

பின்னர், இந்திய குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைக்கப்படும் என தெரிவித்தனர். இதில் மாமன்ற உறுப்பினர்கள் கே. பி. சொக்கலிங்கம், திரவியம், கோமதி சந்தோஷ், ஜெயராமன், கட்சி நிர்வாகிகள் ராமநாதன், இளைஞர் அணி அமைப்பாளர் மதன்குமார், துணை அமைப்பாளர் மணிவண்ணன், சைலஸ், பால உமாபதி, செல்வம், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்

# மெய்யூர் பகுதியில் தார் பிளாண்டு அமைக்க எதிர்ப்பு தெரிவித்து பொதுமக்கள் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்





ஊத்துக்கோட்டை, நவ5-

திருவள்ளூர் மாவட்டம், பூண்டி ஒன்றியம், மெய்யூர் ஊராட்சிக்கு உட்பட்டது ராஜபாளையம் கிராமம் ஆகும். இக்கிராமத்தில் தனிநபர் ஒருவர் 1.87 ஏக்கர் விவசாய நிலத்தை விலைக்கு வாங்கினார்.அந்த நிலத்தில் தார் பிளாண்ட் அமைக்கும் பணியை கடந்த சில மாதங்களுக்கு முன்பு துவங்கினார்.

இதற்கு ராஜபாளையம் கிராம மக்கள் எதிர்ப்பு தெரிவித்து திருவள்ளூர் மாவட்ட கலெக்டர் டாக்டர் ஆல்பிஜான்வர்கிஸிடம் புகார் மனு அளித்தனர் எனவே,மாவட்ட கலெக்டரின் உத்தரவின் பேரில் இப்பணி அப்போது தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. இந்த நிலையில்,இம்மாவட்டத்திற்கு புதிய கலெக்டராக டாக்டர் பிரபுசங்கர் பொறுப்பேற்றுக் கொண்டார்.இந்நிலையில், மீண்டும் தார் பிளான்ட் அமைக்கும் கட்டுமான பணியை தனிநபர் நேற்று முன் தினம் மாலை மீண்டும் துவக்கினார்.

இது குறித்து தகவல் அறிந்த இப்பகுதியை சேர்ந்த கிராம மக்கள் நூற்றுக்கும் மேற்பட்டோர் நேற்று காலை தார் பிளான்ட் அமைக்கும் பணி நடைபெறும் இடத்தை முற்றுகையிட்டு கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.தார் பிளாண்ட் அமைக்கப்பட்டால் இப்பகுதியில் உள்ள நூற்றுக்கணக்கான ஏக்கர் விலைநிலங்கள்பாதிக்கப்படும். நிலத்தடி நீர்மட்டம் மாசுபடும். சுற்றுச்சூழல் பாதிக்கப்படும். சுவாசக் கோளாறு உள்ளிட்ட பல்வேறு நோய் தாக்குதலுக்கு ஆளாகவேண்டிய அவலநிலை ஏற்படும் என்று கூறினர்.தகவல் அறிந்த பெரியபாளையம் காவல் நிலைய போலீசார் மற்றும் வேலகாபுரம் பிர்காவை சேர்ந்த வருவாய் ஆய்வாளர் தனபால் உள்ளிட்ட வருவாய் துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தனர்.

தார் பிளாண்ட் அமைக்கும் பணியை தற்காலிகமாக தடுத்து நிறுத்தினர்.இது குறித்து உயர் அதிகாரிகளிடம் பேசி உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதி கூறினர். இதனை ஏற்று போராட்டத்தில் ஈடுபட்ட கிராம மக்கள் அமைதியாக கலைந்து சென்றனர்.இப்பிரச்சனையால் சுமார் இரண்டுமணி நேரம் இப்பகுதியில் பதட்டமும் பரபரப்பும் நிலவியது.

# சவுடு மணலை கொண்டு அரசு பள்ளி கட்டிடத்தை கட்டிய ஒப்பந்தக்காரரை எச்சரித்த எம்எல்ஏ

மயிலாடுதுறை, நவ- 05:

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுகா திருக்கடையூரில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலை பள்ளியில் வாக்காளர் வரைவு பட்டியல் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. சிறப்பு முகாமில் பட்டியல் சரிபார்த்து பெயர் சேர்த்தல் பெயர் நீக்குதல் திருத்தம் உள்ளிட்டவைகளுக்கு மனு கொடுக்கப்பட்டது. இதனை துவக்கி வைத்த மயிலாடுதுறை திமுக மாவட்ட செயலாளரும், பூம்புகார் தொகுதி சட்டமன்ற உறுப்பினரிமான நிவேதா எம் முருகன் தனது தொகுதி மேம்பாட்டு நிதியில் மூலம் புதிதாக அமைக்கப்பட்டு வரும் ஊராட்சி ஒன்றிய நடுநிலை பள்ளியில் கூடுதல் வகுப்பறை கட்டும் கட்டிடத்தை பார்வையிட்டார்.



அப்போது அங்கு சவுடு மணல் கொட்டப்பட்டிருந்ததை கண்ட நிவேதா எம்.முருகன் அதிர்ச்சி அடைந்து, கட்டிண்ட ஒப்பந்ததாரருக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு கட்டிடத்திற்கு பக்கத்தில் கொட்டி இருந்த மணலை பற்றி கேட்டார். மேலும் இந்த மணலை கொண்டு கட்டினால் கட்டிடத்தின் தரம் சரியாக இருக்காது தரமான மணல் அல்லது எம்சாண்ட் கொண்டு கட்டினால் மட்டும் தரமாக இருக்கும் என்று எச்சரித்தார்.

தொடர்ந்து ஒப்பந்ததாரர்களிடம் கட்டிடத்திற்கு அருகாமையில் கொட்டுப்பட்டிருந்த மண்ணை நீங்கள் கொன்று செல்லவில்லை என்றால் திருக்கடையூர் ஊராட்சியில் சாலைகள் மற்றும் தாழ்வான தேங்க கூடிய கிராமப் பகுதிகளில் மண்களை ஊராட்சி மழை நேரங்களில் நீர் தேங்கக் கூடிய பகுதிகளில் உள்ள குயிருப்பு பகுதிகளில் கொட்டி சரி செய்ய நான் உத்தரவு விட வேண்டுமா என்று பேசினார்.

ஆய்வின்போது ஒன்றிய செயலாளர்கள் அமிர்த விஜயகுமார் எம் அப்துல் மாலிக் ஊராட்சி மன்ற தலைவர் ஜெயமாலதி சிவராஜ் மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் இரா.செந்தில் ஆகியோர் உடன் இருந்தனர்.

# அரசு பணியில் லஞ்சம் வாங்கவில்லை என யாராவது ஒருவர் கூறுங்கள் நான் உங்கள் காலில் விழுகிறேன்,ஊழல் தடுப்பு ஆய்வாளர் கேள்வி, மௌனம் காத்த ஊழியர்கள்

திருவள்ளூர், நவ,5

இத்தனை வருட அரசு பணியில் லஞ்சம் வாங்கவில்லை என யாராவது ஒருவர் கூறுங்கள் நான் உங்கள் காலில் விழுகிறேன் என திருவள்ளூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் தமிழரசி கேட்டதற்கு .பதில் அளிக்காமல் அமைதி காத்த நகராட்சி அதிகாரிகள்.

நாடு முழுவதும் ஊழல் தடுப்பு விழிப்புணர்வு வாரம். அக்டோபர் 31ஆம் தேதி முதல் நவம்பர் ஐந்தாம் தேதி வரை கடைபிடிக்கப்படுகிறது இதையொட்டி திருவள்ளூர் மாவட்டத்தில் மக்கள் அதிகம் கூடும் பஸ் நிலையம். ரயில் நிலையம். பள்ளி கல்லூரி உள்ளிட்ட பகுதிகளில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு போலீசார் லஞ்ச ஒழிப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர் ஊழல் தடுப்பு வாரத்தை முன்னிட்டு இன்று திருவள்ளூர் நகராட்சி அலுவலக ஊழியர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு லஞ்ச ஒழிப்பு விழிப்புணர்வு குறித்து அறிவுரைகள் கூறி உறுதி மொழி ஏற்றனர் அப்போது அதிகாரிகள் மற்றும் ஊழியர்களிடம் பேசிய திருவள்ளூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் தமிழரசி ஊழலில் 185 நாடுகளில் 85 வது இடத்தில் நமது நாடு உள்ளது எனவும் அனைத்து துறைகளிலுமே ஊழல் உள்ளது.

ஊழலில் முதல் இடத்தில் உள்ள துறை எது என சொல்லுங்கள் என நகராட்சி ஊழியரிடம் கேட்டபோது. நகராட்சி அதிகாரிகள் பதில் அளிக்காமல் அமைதி காத்த நிலையில். ஊழல் தடுப்பு அதிகாரியே சார்பதிவாளர் அலுவலகமா ஆர்டிஓ அலுவலகமா வருவாய்த் துறையினரா எந்தத் துறை ஊழலில் முதல் இடத்தில் உள்ளது என கேட்டதற்கு ஊழியர்கள் ரிஜிஸ்டர் ஆபீஸ் ஆர்டிஓ என தெரிவித்த நிலையில். அனைவருமே லஞ்சம் வாங்குகிறார்கள் வாங்காமல் இருக்கிறார்களா. லஞ்சம் வாங்குவதால் எங்கே பிரச்சனை வருகிறது என்றும் இத்தனை வருட பணியில் நான் லஞ்சம் வாங்கவில்லை என ஒருவர் தெரிவியுங்கள் நான் உங்கள் காலில் விழுகிறேன் என்று கூறிய நிலையில் நகராட்சி அதிகாரிகளும் ஊழியர்களும் பதில் சொல்லாமல் மௌனம்



காத்து .ஆய்வாளரின் முகத்தையே பார்த்தனர் பொதுமக்கள் தங்களின் தேவைக்காக நம்மிடம் வரும்போது அவர்களின் அப்பிரியன்ஸை பார்க்கிறோம்.

ஆள் பாதி ஆடை பாதி பார்த்து அவர்களுக்கு மரியாதை அளிக்கிறோம் .அதே வார்த்தையை எளிமையாக வரும் பாமர மக்களுக்கு மரியாதை அளித்தால் உங்களை எதிரியாகவே பார்க்க மாட்டார்கள் நகராட்சியில் 10 லட்சம் ரூபாய் காண்ட்ராக்டில் இரண்டு சதவீதம் கமிஷன் கேட்டால். மேல் தட்டில் இருப்பவர்கள் வருவார்களா வரமாட்டார்கள் என்றும் 2009 ஆம் ஆண்டில் திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த அரசு அதிகாரி ஒருவர். லட்சமாக ஒருவரிடம் பிரிட்ஜ் வாஷிங் மெஷின் வாங்கித் தருமாறு லஞ்சமாக கேட்டுப் பெற்ற நிலையில் பொருட்கள் சிறிதாக உள்ளது இதை கூடவா பார்த்த உங்களால் வாங்க முடியாது என அந்த அதிகாரியின் மனைவி கேட்டதால் பொருட்களை வாங்கித் தந்த நபருக்கு அந்த அதிகாரி போன் செய்து பொருட்கள் சிறிதாக உள்ளது வேறு மாற்றி தர கூறியுள்ளார். பொருட்களை மாற்ற மாட்டார்கள் என அன்நபர் தெரிவித்துள்ளார்.

அதற்காக அப்படி என்றால் மேலும் 10 ஆயிரம் ரூபாய் அதிகமாக கொடுக்குமாறு கேட்டதால் கோபமடைந்த நபர் லஞ்ச ஒழிப்புத் துறையில் புகார் அளித்து சம்பந்தப்பட்ட அதிகாரி மீது வழக்கு பதிவு செய்த நிலையில் அவரும் அவரது குடும்பமும் தற்போது பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் . லஞ்சம் வாங்குவதை நிறுத்தினால் நீங்களும் உங்களது குடும்பமும் உங்களை சார்ந்தவர்களும் செழிப்பாக இருப்பார்கள் அரசு பணியில் இருக்கும் ஊழியர்கள் மற்றும் அதிகாரிகள் லஞ்சம் பெற்று கைது செய்யப்பட்டால் வீட்டில் கொடுக்கப்பட்ட மரியாதை வெளியில் கிடைத்த மரியாதை அத்தனையும் தலைகீழாக போய்விடும் மாறிவிடும் எனவும் இதனால் மக்களின் அடிப்படைத் தேவைகளுக்காகவும் வாழ்வாதாரத்திற்காகவும் அரசு அதிகாரிகள் அலுவலகங்களை நோக்கி வரும் மக்களுக்கு அவர்களது தேவைகளை மரியாதை அளித்து பூர்த்தி செய்தால் எந்த அவப்பெயரும் பிரச்சனையும் வராது என்னும் பேசிய நிலையில். ஏற்கனவே நாங்கள் எவ்வளவு லஞ்சம் வாங்குவது என்ற குழப்பத்தில் உள்ள நிலையில். லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரி யோ வாங்க சொல்கிறாரா அல்லது வேண்டாம் எனக் கூறுகிறாரா என்ற குழப்பத்திலேயே லஞ்ச ஒழிப்புத்துறை ஆய்வாளரின் முகத்தை பார்த்தபடி அதிகாரிகள் அமர்ந்திருந்தனர்

## காய்ச்சல் பரவுவதை தடுக்க தூய்மை பணியை மேற்கொள்ள வேண்டும்

# மெய்யூர் ஊராட்சி மன்றத் தலைவரிடம் கிராம மக்கள் கோரிக்கை வைத்தனர்

*ஊத்துக்கோட்டை, நவ5-*

*திருவள்ளூர் மாவட்டம், பூண்டி ஒன்றியம், மெய்யூர் ஊராட்சியில் உள்ள மண்ணடி தெரு,பண்டார தெரு உள்ளிட்ட பல்வேறு தெருக்களில் வீடுகளுக்கு பின்புறம் உள்ள கழிவுநீர் கால்வாயில் தண்ணீர் தேங்கி நின்றுள்ளது. கொசுக்கள் அதிக அளவு உள்ளது.*

*மேலும்,துர்நாற்றம் வீசுகிறது. எனவே,இக்கிராமத்தில் கடந்த சில நாட்களாக ஏராளமானோருக்கு காய்ச்சல் தலைவலி உள்ளிட்ட உபாதைகள் ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.*


*எனவே,கழிவு நீர் கால்வாயில் தண்ணீர் தேங்கி நிற்பதை அகற்றி கால்வாயை சீரமைத்து துர்நாற்றம் வீசுவதை தடுக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிராம மக்கள் சார்பாக இக்கிராமத்தைச் சேர்ந்த சுபாஷினி சிவகுமார் ஊராட்சி மன்ற தலைவர் லாவண்யா சரத்பாபுவிடம்கோரிக்கை மனு வழங்கினர்.*

*எனவே,போர்க்கால அடிப்படையில் கழிவு நீர் கால்வாயில் தேங்கியுள்ள நீரை அகற்றி நோய் தடுப்பு நடவடிக்கையை மேற்கொள்வதாக ஊராட்சி மன்ற தலைவர் லாவண்யா சரத்பாபு கிராம மக்கள் மற்றும் சுபாஷினி சிவகுமாரிடம் உறுதி கூறினார்.*

# மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் அருகே மின்மாற்றியில் தீ விபத்து விடுதிக்குள் புகை பரவியதால் 4 மாணவிகள் மயக்கம்

மதுரை : நவ. 5, மதுரை காமராஜர் பல்கலைக்கழக விடுதி அருகே உள்ள மின்மாற்றியில் ஏற்பட்ட திடீர் தீ விபத்து காரணமாக 4 மாணவிகள் மயக்கம் அடைந்தனர். தீ விபத்தால் நள்ளிரவில் மாணவிகள் விடுதியை விட்டு அவசர அவசரமாக வெளியேற முற்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

வடகிழக்கு பருவமழை தொடங்கியுள்ள நிலையில் தமிழகத்தில் பல்வேறு இடங்களில் பரவலாக மழை பெய்யக்கூடும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருந்த நிலையில், மதுரையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை முதல் கனமழை பெய்து வந்தது. இந்த நிலையில், இரவிலும் ஆங்காங்கே இடியுடன் கூடிய கனமழை பெய்தது. மதுரை நாகமலை புதுக்கோட்டை பகுதியில் இயங்கி வரும் மதுரை காமராஜர் பல்கலைக்கழக வளாகத்தில் பெய்த மழையின் போது,



பல்கலைக்கழக பெண்கள் விடுதி அருகே இருந்த மின் மாற்றியில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தால் தீயானது கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது. இதனால் அதிர்ச்சியடைந்த மாணவிகள் அங்கிருந்த பல்கலைக்கழக நிர்வாகத்தினருக்கு தகவல் தெரிவித்தனர்.

சில விடுதி மாணவிகளுக்கு மூச்சுத் திணறல் ஏற்படவே தீயணைப்புத் துறையினருக்கும், 108 ஆம்புலன்ஸுக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது. தகவல் அறிந்து வந்த மதுரை பெரியார் மற்றும் திருப்பரங்குன்றம் ஆகிய இரண்டு தீயணைப்பு நிலையங்களில் இருந்து இரண்டு வாகனங்கள் மூலம் தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்தனர். மழை என்பதால் தீ தானாகவே அணைந்தது. இந்த நிலையில் பல்கலைக்கழக மாணவிகள் விடுதி வளாகம் முழுவதும் புகை மூட்டமாக காணப்பட்டது. இதில் நான்கு மாணவிகளுக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டதால், அருகில் உள்ள பல்கலைக்கழக மருத்துவமனையில் அவர்களுக்கு முதல் உதவி சிகிச்சை அளிக்கப்பட்டது.

மழையினால் மதுரை காமராஜர் பல்கலைக்கழக மாணவி விடுதி அருகே இருந்த மின் கம்பத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் மாணவிகள் விடுதி வளாகம் முழுவதும் பரபரப்பான சூழல் காணப்பட்டது. சம்பவ இடத்துக்கு வந்த நாகமலை புதுக்கோட்டை போலீஸார் மற்றும் தீயணைப்புத்துறையினர் விபத்து குறித்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



தென்காசி மாவட்டம் கடையநல்லூர் ரஹ்மானியாபுரம் மேற்கு பகுதியில் பொதுமக்கள் வாழும் குடியிருப்பு பகுதிகளில் இரவு நேரங்களில் பூட்டி இருக்கும் வீடுகளில் திருடர்கள் வீட்டின் பூட்டை உடைத்து திருடி செல்கின்றனர், ஆகையால் பொதுமக்களின் நலன் கருதி தக்வா ஐக்கிய கூட்டமைப்பு சார்பில் ரஹ்மானியாபுரம் மேற்குப் பகுதியில் பத்துக்கும் மேற்பட்ட இடங்களில் கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட்டுள்ளது, இந்நிகழ்ச்சிக்கு புளியங்குடி காவல்துறை துணை கண்காணிப்பாளர் வெங்கடேசன், தலைமைவகித்து ரிப்பன் வெட்டி கண்காணிப்பு கேமராவை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் கடையநல்லூர் காவல்துறைஆய்வாளர் ராஜா, சப்-இன்ஸ்பெக்டர் கருப்பசாமி பாண்டியன், கடையநல்லூர் காவல் நிலைய காவலர்கள், தக்வா ஐக்கிய கூட்டமைப்பு சார்பாக தலைவர் முகமது அலி, துணைத் தலைவர் யூசுப், செயலாளர் சதக்கத்துல்லா, துணைச் செயலாளர் செய்யது அலி, பொருளாளர் செய்யது முகம்மது, கமிட்டி உறுப்பினர்கள் அப்துல் மஜீத், திவான் மைதீன், நத்தஹர் பாதுஷா, மைதீன்அப்துல் மஜீத், கடையநல்லூர் நகர்மன்ற உறுப்பினர் யாசர்கான் எஸ்டிபிஐ, ஆகியோர் கலந்து கொண்டு கண்காணிப்பு கேமராவை தொடங்கி வைத்தனர்.



புதுக்கோட்டை மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அலுவலகத்தில் கோப்புகளை பள்ளி கல்வித்துறை அமைச்சர் மகேஷ் பொய்யாமொழி ஆய்வு செய்தார். அருகில் அமைச்சர். மெய்யநாதன், சட்டமன்ற உறுப்பினர் முத்துராஜா மற்றும் கல்வித் துறை அதிகாரிகள் உள்ளனர்.

# ராஜபாளையம் ராக்காச்சி அம்மன் கோயில் ஆற்றில் வெள்ளப்பெருக்கு

ராஜபாளையம் : நவ. 5,

ராஜபாளையம் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் பெய்த கனமழை காரணமாக ராக்காச்சி அம்மன் கோயில் ஆறு மற்றும் அணைத்தலை ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.



ராஜபாளையம் மேற்குத் தொடர்ச்சி மலையடிவாரத்தில் அய்யனார் கோயில் மற்றும் ராக்காச்சி அம்மன் கோயில் உள்ளது. மலையடிவாரப் பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் மா, தென்னை, வாழை உள்ளிட்ட பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் பெய்யும் கனமழையால் அய்யனார் கோயில் ஆறு, ராக்காச்சி அம்மன் கோயில் ஆற்றில் நீர்வரத்து அதிகரித்துள்ளது.

மலைப் பகுதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை பெய்த கனமழை காரணமாக ராக்காச்சி அம்மன் கோயில் ஆறு, அணைத்தலை ஆறு மற்றும் மலையில் உருவாகும் நீரோடைகளில் நீர்வரத்து அதிகரித்து வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதனால் ராஜபாளையத்திலிருந்து ராக்காச்சி அம்மன் கோயில் செல்லும் வழியில் உள்ள தரைப்பாலத்தை வெள்ளநீர் மூழ்கடித்தது. விளைநிலங்களுக்கு சென்ற விவசாயிகள் திரும்பிவருவதில் சிரமத்தை சந்தித்தனர்.

# தென்காசியில் திமுக மருத்துவ அணி நிர்வாகிகள் கூட்டம்

தென்காசி, நவ.5-

தென்காசியில் திமுக மருத்துவ அணி நிர்வாகிகள் கூட்டம் நடைபெற்றது.



தென்காசி தெற்கு மாவட்ட திமுக அலுவலகமான கலைஞர் அறிவாலயத்தில் நெல்லை, கன்னியாகுமரி, தூத்துக்குடி, தென்காசி மாவட்டம் மற்றும் தொகுதி திமுக மருத்துவ அணி நிர்வாகிகள் கூட்டம் நடைபெற்றது, தென்காசி தெற்கு மாவட்டப்பொறுப்பாளர் வே.ஜெயபாலன், வடக்கு மாவட்டச் செயலாளர் ராஜா எம்.எல். ஏ. ஆகியோர் தலைமை வகித்தனர், திமுக மருத்துவ அணி மாநில துணை செயலாளர்கள் சு.செ.செண்பகவிநாயகம், வெற்றிவேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர், தென்காசிதெற்கு மாவட்ட அமைப்பாளர் மருத்துவர் அன்பரசன்வரவேற்றார்.

மாவட்டத்தலைவர் மருத்துவர் மாரிமுத்து தொகுப்புரை ஆற்றினார், சிறப்பு விருந்தினர்களாக மாநில மருத்துவரணி தலைவர் கனிமொழி சோமுஎம்பி,மற்றும்மாநில மருத்துவரணி செயலாளர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ. ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினார், கூட்டத்தில் ஒன்றிய கவுன்சிலர் ஆலடி எழில்வாணன், நெல்லை, கன்னியாகுமரி, தூத்துக்குடி, தென்காசி மாவட்ட மருத்துவ அணி நிர்வாகிகள் மருத்துவர்கள் சஞ்சீவி, கணேஷ்ராஜா, கார்த்திக்குமார், சுரேஷ், பெசிஸ்ஜெயசீலன்துரை, சௌந்தர்ராஜன், அன்பரசன், மணிகண்டன், குமரேசபாண்டியன், பவித்ரா, மாரியப்பன், மகாராஜன், ரவி, செபஸ்டின் ஆனந்த், எட்வின்ராஜன், புரிங்க்போன், எழிலரசு, வேதா, ஸ்டாலின்தாமஸ், விஜய், ராம், இம்மானுவேல் பிரகாஷ்ராஜ், சம்பத்கண்ணன், தமிழரசன், பிரபாகரன், சேக்முகமது, கௌதமிதமிழரசன், விஜய்அருண் மற்றும் ஒன்றிய செயலாளர் அழகுசுந்தரம், ஆயிரப்பேரிமுத்துவேல், தகவல் தொழில் நுட்ப அணி மாவட்ட துணை அமைப்பாளர் சங்கர், நிர்வாகிகள் சாம்பவர்வடகரை மாறன், ராம்ராஜ், கணேசன், குற்றாலம் சுரேஷ், கடையநல்லூர் காளிமுத்து, கருப்பணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் மாநகராட்சி அண்ணாமலை நகர், நகர்புற நல மையம் அருகில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பாக 8 கி.மீ நடப்போம் நலம் பெறுவோம் சுகாதார நடைபாதை திட்டத்தை கலெக்டர் கே.எம்.சரயு, சட்டமன்ற உறுப்பினர் ஒய்.பிரகாஷ், மேயர் எஸ்.ஏ.சத்யா ஆகியோர் கொடியசைத்து தொடங்கி வைத்தார். கமிஷனர் சினேகா, துணை இயக்குநர் (சுகாதார பணிகள்) ரமேஷ்குமார் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலில் மாவட்ட ஆதிதிராவிட நலக்குழு மற்றும் விடுப்பு கண்காணிப்பு கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் துரை ரவிச்சந்திரன் தலைமையில் சங்கரன்கோவில் எம்எல்ஏவும், தென்காசி வடக்கு மாவட்ட திமுக செயலாளருமான ராஜா, தென்காசி பாராளுமன்ற உறுப்பினர் தனுஷ் எம்.குமார் முன்னிலையில் பல்வேறு கோரிக்கைகளின் பெயரில் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது, இந்நிகழ்ச்சியில் ஆதிதிராவிட நலக்குழுத் தலைவர் கே.எஸ்.எஸ்.எம். சங்கர், கோமு மற்றும் துறை சார்ந்த அரசு அதிகாரிகள் கலந்து கொண்டுள்ளனர்.

# சென்னையில் பேருந்தில் தொங்கியபடி சென்ற மாணவர்களை தாக்கிய நடிகை ரஞ்சனா நாச்சியார் கைது

சென்னை : நவ. 5, சென்னையில் அரசுப் பேருந்தில் படியில் தொங்கியபடி சென்ற மாணவர்களைத் தாக்கி ஓட்டுநர், நடத்துநருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட நடிகை ரஞ்சனா நாச்சியாரை போலீஸார் நேற்று காலை கைது செய்தனர்.



சென்னை அருகே கெருகம்பாக்கம் பகுதியில் சென்ற மாநகர அரசுப் பேருந்தில் படியில் தொங்கியபடி மாணவர்கள் சிலர் பயணித்தனர். அப்போது அந்த வழியாக தனது வாகனத்தில் வந்த நடிகை ரஞ்சனா நாச்சியார் பேருந்தை ஓவர்டேக் செய்து வழிமறித்து நிறுத்தியுள்ளார். பின்னர் மாணவர்களை சரமாரியாகத் திட்டியுள்ளார். படியில் தொங்கியபடி பயணம் செய்ததைக் கண்டித்த அவர், மாணவர்களை இறக்கிவிட்டதோடு மட்டுமல்லாது அவர்களைத் தாக்கியும் உள்ளார். மேலும் பேருந்து ஓட்டுநர், நடத்துநரை ஒருமையில் பேசி சண்டை இழுத்துள்ளார். இந்தக் காட்சிகள் அடங்கிய வீடியோ சமூக வலைதளங்களில் வைரலானது.

இந்நிலையில் நடிகை ரஞ்சனா மீது அரசுப் பேருந்து ஓட்டுநர் சரவணன் போலீஸில் புகார் அளித்தார். இந்தப் புகாரின் அடிப்படையில் நேற்று காலை மாங்காடு போலீஸார் ரஞ்சனாவை அவரது வீட்டுக்கே சென்று கைது செய்தனர். மாணவர்களைத் தாக்கியது, அரசு ஊழியர்களைப் பணி செய்யவிடாமல் தடுத்தது உள்ளிட்ட ஐந்து பிரிவுகளின் கீழ் அவர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கைது செய்யவந்த காவல்துறையினருடனும் நடிகை வாக்குவாதம் செய்தார். கைது ஆணை இருக்கிறதா? என்ன காரணத்துக்காக கைது செய்கிறீர்கள்? என்றெல்லாம் கேள்வி எழுப்பினார். அந்தக் காட்சிகளும் இணையத்தில் வெளியாகியுள்ளன. கைது செய்யப்பட்ட நடிகை ரஞ்சனா நாச்சியார் தமிழக பாஜகவிலும் இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ராமர் கோயில் திறப்பு : ஆர்எஸ்எஸ் அகில இந்திய செயற்குழு கூட்டத்தில் இன்று ஆலோசனை

புதுடெல்லி : நவ. 5,

ஆர்எஸ்எஸ் இந்திய செயற்குழு கூட்டம் இன்று முதல் வரும் 7-ம் தேதி வரை குஜராத் மாநிலம் புஜ் நகரில் நடைபெற இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதில், ஜனவரி 22, 2024 அன்று அயோத்தியில் ராமர் கோயிலில் நடைபெறவுள்ள கும்பாபிஷேகம் குறித்தும் ஆலோசிக்கப் படவுள்ளது.

இது தொடர்பாக ஆர்எஸ்எஸ் அமைப்பின் ஊடகத்துறை பொறுப்பாளர் சுனில் அம்பேத்கர் வெளியிட்டுள்ள அறிக்கை: ஆர்எஸ்எஸ் வருடாந்திர அகில இந்திய செயற்குழு கூட்டம் இன்று முதல் நவம்பர் 7 வரை குஜராத் மாநிலம் புஜ்-ல் நடைபெறுகிறது. இதில் பல்வேறு மாநிலத் தலைவர்கள், துணை தலைவர்கள், மாநில செயலாளர்கள், மாநில அமைப்பாளர்கள் பங்கேற்பார்கள். இந்த ஆலோசனை கூட்டத்தில் ஆர்எஸ்எஸ் தலைவர் மோகன் பாகவத், பொதுச்செயலாளர் தத்தாத்ரேய ஹொசபாலே, துணை பொதுச் செயலாளர் கிருஷ்ணகோபால், டாக்டர் மன்மோகன் வைத்யா, முகுந்தா, அருண் குமார், ராம்தத் சக்ரதார் மற்றும் அனைத்து அகில இந்திய பொறுப்பாளர்களும் பங்கேற்பார்கள். விஸ்வ ஹிந்து பரிஷத், அகில பாரதீய வித்யார்த்தி பரிஷத், பாரதிய ஜனதா கட்சி, பாரதீய மஸ்தூர் சங்கம், பாரதீய கிசான் சங்கம் உள்ளிட்ட அமைப்புகளின் அகில இந்திய அமைப்பாளர்களும் இதில் பங்கேற்பார்கள்.

இந்த கூட்டத்தில், ஆர்எஸ்எஸ் வேலைகள் குறித்த ஆய்வு மற்றும் கடந்த செப்டம்பரில் புனேவில் நடைபெற்ற ஆர்எஸ்எஸ்-ன் பல்வேறு அமைப்புகளின் கூடுதலில் எடுக்கப்பட்ட முடிவுகள், ஆர்எஸ்எஸ் தலைவரின் விஜயதசமி உரையில் இடம்பெற்ற விஷயங்கள் குறித்தும்விவாதிக்கப்படும். சமுதாயத்தின் எதிர்பார்ப்பிற்கு ஏற்றதாக ஆர்எஸ்எஸ் வேலைமுறைகளில் தேவையான மாற்றங்கள், உதாரணமாக சங்கத்தின் முதலாமாண்டு முகாம் இரண்டாம் ஆண்டு முகாம், மூன்றாம் ஆண்டு



முகாம்களில் 2024 முதல் புதிய பாடத்திட்டங்கள் அமல் செய்யப்படும்.

ஜனவரி 22, 2024 அன்று அயோத்தியில் ராமர் கோயில் கும்பாபிஷேகம் நடைபெறும்போது, நாட்டின் ஒவ்வொரு கிராமம், நகரங்களில் உள்ள கோயில்களில் நிகழ்ச்சி நடத்துவது தொடர்பாகவும் விவாதிக்கப்படும். இந்த சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியில் ஆர்எஸ்எஸ்-ன் பங்களிப்பு எவ்வாறு இருக்கவேண்டும் என்பது குறித்தும், இந்தகூட்டத்தில் விவாதிக்கப்படும். பின்னர் இந்த தகவல், அனைத்து ஆர்எஸ்எஸ் உறுப்பினர்களுக்கும் அளிக்கப்படும், அதன் மூலம் இதில் சமுதாயமும் பங்கேற்க வழி ஏற்படும்.

டாக்டர் கேசவ் பலிராம்ஹெட்கேவாரால் 1925-ல் துவக்கப்பட்ட ஆர்எஸ்எஸ், 98 ஆண்டுகளாக தொடர்ந்து வளர்ந்து வருகிறது. 2025-ம் ஆண்டு நூற்றாண்டு வருவதையொட்டி, ஆர்எஸ்எஸ் அமைப்பை மேலும் விரிவுப்படுத்த வேலைகள் நடந்து வருகின்றன. பலர் தங்கள் நேரத்தை கொடுக்க முன்வந்துள்ளனர். 2 ஆண்டுகளுக்கு முழுமையாக ஆர்எஸ்எஸ் வேலை செய்ய பலர் முன்வந்துள்ளனர். இதை மையமாக வைத்து, தீர்மானிக்கப்பட்ட ஷாகா (கிளை) இலக்குகளின் நிலை குறித்து 6 மாதங்களுக்கு ஒருமுறை ஆய்வு செய்ய ஏற்கனவே யோசனை செய்யப்பட்டது. இந்த கூட்டத்தில் இது குறித்த ஆய்வு மற்றும் அடுத்த ஒன்றரை வருடங்களில் அந்த இலக்குகளை அடைவது எப்படி என்பது குறித்தும் விவாதிக்கப்படும். இதுவரை நடந்துள்ள வேலைகள், மேலும் எவ்வாறு துரிதப்படுத்துவது போன்றவையும் விவாதிக்கப்படும். ஆர்எஸ்எஸ் நூற்றாண்டு விழாவின் போது, அது பற்றிய புரிதலை சமுதாயத்தின் முன் எப்படி எடுத்துச் செல்வது என்பதும் ஆலோசிக்கப்படும்.

தனது விஜயதசமி உரையில், ஆர்எஸ்எஸ் தலைவர் ஷாகா நடைபெறும் இடத்தை சுற்றி சமுதாய மாற்றம் ஏற்படுத்த வலியுறுத்தினார். சமூக ஒற்றுமை, சுற்றுசூழல் பாதுகாப்பு, தண்ணீர் சேமிப்பு, பிளாஸ்டிக் தவிர்த்தல் மேலும் உதாரண குடும்பமாக வாழ்வது எப்படி என்று பேசினார். அத்துடன் சுதேசி, சமூக கடமை போன்றவற்றை ஸ்வயம்சேவகர்கள் தாங்கள் கடைபிடித்து, ஒரு உதாரணமாக இருந்து சமுதாயத்தையும் ஈடுபடுத்த வேண்டும் என்று பேசினார். நாடு முழுவதிலும் இருந்து மொத்தமாக 381 பொறுப்பாளர்கள் இந்த செயற்குழுவில் பங்கேற்பார்கள். ஆர்எஸ்எஸ் வேலைகள் பற்றி விவாதிக்கும்போது, நடைமுறையில் சந்திக்கும் விஷயங்கள் குறித்தும் விவாதிக்கப்படும். இன்று காலை 9 மணிக்கு கூட்டம் துவங்கி, நவம்பர் 7ம் தேதி மாலை 6 மணிக்கு நிறைவடையும் என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சங்கரன்கோவிலில் திமுக வடக்கு மாவட்ட செயற்குழு கூட்டம்

சங்கரன்கோவில், நவ.5-

தென்காசி வடக்கு மாவட்ட திமுக செயற்குழு கூட்டம் சங்கரன்கோவிலில் மாவட்ட திமுக அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது, மாவட்ட அவைத்தலைவர் பத்மநாதன் தலைமை வகித்தார், தலைமை செயற்குழு உறுப்பினர்



பரமகுரு, மாவட்ட பொருளாளர் சரவணன், மாவட்ட துணை செயலாளர்கள் மனோகரன், ராஜதுரை, புனிதா முன்னிலை வகித்தனர், இதில் வடக்கு மாவட்டச் செயலாளர் ராஜா எம்எல்ஏ கலந்துகொண்டு தீர்மானங்கள் குறித்து பேசினார், இதில்

தென்காசி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட, சங்கரன்கோவில் மற்றும் வாசுதேவநல்லூர் சட்டமன்ற தொகுதியில் அமைந்துள்ள கூட்டுறவு சங்கங்களுக்கான தேர்தல் விரைவில் நடைபெற உள்ளது.

அதன் பொருட்டு தலைமைக் கழகத்தின் வழிகாட்டுதலின் படி ஐந்துபேர் கொண்ட கூட்டுறவு தேர்தல் பணிக்குழு அமைப்பது எனவும், ஒன்றிய, நகரம், பேரூர் கழகத்தின் சார்பு அணிகளுக்கான நிர்வாகிகள் பட்டியலை உடனடியாக மாவட்ட கழகத்தில் ஒப்படைக்க வேண்டும் எனவும், வரும் பாராளுமன்ற தேர்தலில் தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி உள்ளிட்ட 40 பாராளுமன்ற தொகுதியில் 40 தொகுதிகளையும், தென்காசி பாராளுமன்ற தொகுதியில் திமுக மிகப்பெரிய வெற்றியை பெறுவதற்கான பணிகளை மேற்கொள்ள வேண்டும் ,மேலும் திமுக அரசின் மகளிர்க்கான திட்டங்களை, மக்கள் நலத்திட்டங்களை, திமுக அரசின் சாதனைகளை கழகத்தினர் பொதுமக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

இதில் பொதுக்குழு உறுப்பினர்கள் வேல்சாமிபாண்டியன், மகேஸ்வரி, பராசக்தி ,ஒன்றிய செயலாளர்கள் லாலாசங்கரபாண்டியன், கடற்கரை, பெரியதுரை, பொன்முத்தையா பாண்டியன், பூசைபாண்டியன் , வெற்றிவிஜயன், கிறிஸ்டோபர், சேர்மத்துரை , பெரியதுரை ,மதிமாரி முத்து ராமச்சந்திரன், நகரச் செயலாளர் பிரகாஷ், பேரூர் திமுக செயலாளர்கள் மாரிமுத்து , குருசாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

## வரலாறு விளையாட்டு

### இந்த அணி மிகவும் ஸ்பெஷல்

# உலகக் கோப்பை தொடரில் இருந்து விலகிய ஹர்திக் பாண்டியா நெகிழ்ச்சி

**டெல்லி : நவ. 5,**

**கணுக்காலில் ஏற்பட்ட காயம் குணமடையாமல் இருப்பதால் உலகக் கோப்பை தொடரில் இருந்து ஹர்திக் பாண்டியா விலகியுள்ளார் என்று பிசிசிஐ அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது. இது இந்திய அணிக்கு பெரிய பின்னடைவாக அமைந்துள்ளது.**



இந்தியாவில், உலகக் கோப்பை கிரிக்கெட் தொடர் விறுவிறுப்பாக நடந்து வருகிறது. உலகக் கோப்பை தொடரில் தொடர்ச்சியாக 7-வது போட்டியிலும் வென்று இந்திய அணி புள்ளிப் பட்டியலில் முதல் இடத்தில் உள்ளது. சொந்த மண்ணில் உலகக் கோப்பையை எதிர்க்கொள்ளும் இந்திய அணி ஜடேஜா, ஹர்திக் பாண்டியா என 2 ஆல் ரவுண்டருடன் களமிறங்கியுள்ளது. இதில், இந்தியா மற்றும் வங்கதேச அணிகளுக்கு இடையிலான 17வது லீக் போட்டியின்போது ஹர்திக் பாண்டியா காயம் அடைந்தார். போட்டியின் போது பந்தை காலால் தடுக்க முயன்ற ஹர்திக் பாண்ட்யா, கால் தவறி கீழே விழுந்தார்.

இதனால் அவரது காலில் காயம் ஏற்பட்ட நிலையில், கடந்த 2 வாரங்களாக பெங்களூருவில் சிகிச்சை பெற்று வந்ததாகக் கூறப்படுகிறது. இதையடுத்து உலகக் கோப்பை தொடரின் அரை இறுதிப் போட்டியில் ஹர்திக் பாண்டியா பங்கேற்பார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் கணுக்காலில் ஏற்பட்ட காயம் குணமடையாமல் இருப்பதால் உலகக் கோப்பையி தொடரில் இருந்தே ஹர்திக் பாண்டியா விலகியுள்ளார் என்று பிசிசிஐ அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது. இது இந்திய அணிக்கு பெரிய பின்னடைவாக அமைந்துள்ளது. அவருக்குப் பதிலாக பிரசித் கிருஷ்ணா அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் இது குறித்து அவர் தன்னுடைய சமுக வலைதள பக்கத்தில், "உலகக் கோப்பையின் மீதமுள்ள போட்டிகளை நான் மிஸ் செய்வேன் என்பதை என்னால் ஜீரணிக்கவே முடியவில்லை. ஒவ்வோர் ஆட்டத்தின் ஒவ்வொரு பந்திலும் அவர்களை உற்சாகப்படுத்தி, உற்சாகத்துடன், அணியுடன் இருப்பேன். அனைவரின் வாழ்த்துகளுக்கும், அன்புக்கும், ஆதரவுக்கும் மிக்க நன்றி. எனக்கு இந்த அணி மிகவும் ஸ்பெஷல். நிச்சயமாக அனைவரையும் பெருமைப்படுத்துவோம் என நம்புகிறேன்'' எனத் தெரிவித்துள்ளார்.

# முதல்முறையாக துபாயில் ஐபிஎல் ஏலம்

## உறுதி செய்தது பிசிசிஐ

**மும்பை : நவ. 5,**

**2024ம் ஆண்டிற்கான ஐபிஎல் ஏலம் துபாயில் நடைபெறும் என்று பிசிசிஐ அறிவித்துள்ளது. இந்தியா அல்லாத வேறு நாட்டில் இந்த ஏலம் நடத்தப்படுவது இதுவே முதல்முறை.**



ஐபிஎல் தொடருக்காக 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை மெகா ஏலமும், ஆண்டிற்கு ஒருமுறை மினி ஏலமும் நடத்தப்பட்டு வருகிறது. இந்த ஆண்டிற்கான மினி ஏலம் துபாயில் நடைபெறும் என தகவல்கள் வெளியாகியிருந்தன. ஆனால், அந்த தகவலை பிசிசிஐ இதுவரை உறுதிப்படுத்தாமல் இருந்தது.

இந்நிலையில், ஏலம் நடக்கும் தேதியையும், அரங்கையும் பிசிசிஐ அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது. இந்த ஆண்டிற்கான ஐபில் மினி ஏலம் வரும் டிசம்பர் மாதம் 19ம் தேதி நடைபெற உள்ளது. கோக கோலா அரேனாவில் இந்த ஏலம் நடைபெற உள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு ஐபிஎல் தொடரில் விளையாட ஆர்வமுடன் இருப்பதாக ஆஸ்திரேலிய வேகப்பது வீச்சாளர் மிட்சல் ஸ்டார்க் தெரிவித்துள்ளார். அதேநேரம், லக்னோ அணிக்காக விளையாடி வந்த மேற்கு இந்திய வீரர் ரொமாரியோ ஷெப்பர்ட் அந்த அணியில் இருந்து மும்பை அணிக்கு செல்கிறார். அவர் கடைசியாக 50 லட்சம் ரூபாய்க்கு ஏலம் எடுக்கப்பட்ட நிலையில், அதே ஊதியத்திற்கு அவர் மும்பை அணிக்காக விளையாட உள்ளார்.

### படுதோல்விக்கான காரணம்

# இலங்கை அணியிடம் விளக்கம் கேட்கும் கிரிக்கெட் வாரியம்



**இலங்கை : நவ. 5,**

**நடப்பு உலகக் கோப்பை தொடரில் சிறப்பாக விளையாடும் என கணித்த பல அணிகள் சொதப்பலான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகின்றன. அதிலும் இங்கிலாந்து, இலங்கை அணிகளின் தோல்வி கிரிக்கெட் ரசிகர்களிடையே ஒரே நேரம் அதிர்ச்சியையும், ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியுள்ளது.**

இலங்கை அணியைப் பொறுத்தவரை இந்த ஆண்டு உலகக் கோப்பை தொடருக்கு தகுதி சுற்று மூலமாகவே நுழைந்தது. அதேநேரம், அந்த அணி கடைசியாக விளையாடிய தொடர்களிலும் சுமாரான ஆட்டத்தையே வெளிப்படுத்தியது. இந்த ஆண்டு செப்டம்பர் மாதம் நடைபெற்ற ஆசியக் கோப்பை தொடரின் இறுதி போட்டியைத் தவிர்த்து மற்ற ஆட்டங்களில் அந்த அணி சிறப்பாகவே விளையாடியது.

ஆனால், உலகக் கோப்பை தொடரின் முதல் ஆட்டத்தில் இருந்தே அந்த அணி தோல்வியை சந்தித்து வருகிறது. இதுவரை 7 போட்டிகளில் ஆடியுள்ள அந்த அணி இங்கிலாந்து, நெதர்லாந்து அணிகளை மட்டுமே வீழ்த்தியுள்ளது. மற்ற 5 போட்டிகளிலும் படுதோல்வியை சந்தித்துள்ளது. அதிலும் கடந்த செவ்வாய்கிழமை நடைபெற்ற போட்டியில் இந்தியாவிடம் 55 ரன் மட்டுமே எடுத்து, 302 ரன் வித்தியாசத்தில் தோல்வியை தழுவியது.

இந்த தோல்வியை இலங்கை ரசிகர்களால் ஏற்றுக்கொள்ள முடியாததால், சமூக வலைதளங்களில் கடுமையான விமர்சனங்களை முன் வைத்து வருகின்றனர். இதனால், கடும் நெருக்கடிக்குள்ளாகியுள்ள அந்நாட்டு கிரிக்கெட் வாரியம், அணி பயிற்சியாளர் டாம் மூடி, அணி வீரர்களிடம் இந்தியாவுடனான தோல்வி குறித்து பதிலளிக்க உத்தரவிட்டுள்ளது. இதுகுறித்து, கிரிக்கெட் வாரியம் சில கேள்விகளையும் முன் வைத்துள்ளது.

மாதிரியான திட்டமிடலும், தயாரிப்பும் மேற்கொள்ளப்பட்டது. போட்டிக்கு இடையே சூழலை பொறுத்து எப்படியான முடிவுகள் எடுக்கப்பட்டது. போட்டிக்கு முன் அணி தேர்வு எப்படி செய்யப்பட்டது. வீரர்களின் காயம், அவர்களது ஆட்டத்திறன் பாதிப்பு குறித்து விவாதிக்கப்பட்டதா?. ஒவ்வொரு போட்டியின் முடிவிலும் அணியினர் கலந்துரையாடினார்களா?. அதில் இருந்து எப்படியான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்ற கேள்விகள் எழுப்பட்டுள்ளது. இது அணி வீரர்களுக்கு பெரும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

இனி வரும் போட்டிகளில் இலங்கை அணி வெற்றி பெற்று முதல் 8 இடத்தைப் பிடிக்குமா என்பதே தற்போதைய கேள்வியாக உள்ளது. அப்படி அடுத்த போட்டிகளிலும் தோற்றால் 2025-ம் ஆண்டு நடைபெற உள்ள சாம்பியன் கோப்பை தொடரில் இருந்து வெளியேறும் நிலைக்கு அந்த அணி தள்ளப்படும்.

# 'பாரா' ஆசிய விளையாட்டில் அசத்திய தமிழக வீரர்களுக்கு உற்சாக வரவேற்பு

**சென்னை : நவ. 5,**

**'பாரா' ஆசிய விளையாட்டு போட்டியில் பதக்கங்கள் வென்று தமிழகம் திரும்பிய வீரர்களுக்கு, சென்னை விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.**



சீனாவில் நடைபெற்ற இந்த தொடரில் இந்தியா 111 பதக்கங்களை வென்று வரலாற்று சாதனை படைத்தது. இந்திய குழுவில் இடம் பெற்றிருந்த தமிழகத்தைச் சேர்ந்த துளசிமதி பேட்மிட்டன் மகளிர் ஒற்றையர் பிரிவில் தங்கம், மாரியப்பன் உயரம் தாண்டுதலில் வெள்ளி, தர்மராஜ் நீளம் தாண்டுதலில் தங்கம், சிவரஞ்சன் பேட்மிட்டன் ஆண்கள் பிரிவில் தங்கம், மனிஷா மகளிர் ஒற்றையர் பிரிவில் வெங்கலம், நித்யஸ்ரீ மகளிர் ஒற்றையர் பிரிவில் வெண்கலம், முத்துராஜ் வெண்கலம் வென்றனர். நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை சென்னை திரும்பிய வீரர், வீராங்கனைகளுக்கு, தமிழ்நாடு அரசு சார்பில் விமான நிலையத்தில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

### ஒரு லட்சம் ரன்கள் எடுத்தாலும்

# பலவீனம் இல்லாத பேட்டர்கள் இருக்க முடியாது

## — கோலி குறித்து ஷோயப் மாலிக் —

**கராச்சி : நவ. 5,**

**விராட் கோலி உலகின் தலைசிறந்த பேட்டர், அவரிடமும் பலவீனம் உள்ளது என்று பாகிஸ்தான் வீரர் ஷோயப் மாலிக் கூறியதையடுத்து ஷோயப் மாலிக் கோலி ரசிகர்கள் படையின் சமூக ஊடகக் கேலிப்பொருளாகி வறுத்து எடுக்கப்பட்டுள்ளார்.**



சில நாட்களுக்கு முன்பாக விராட் கோலி பற்றி சர்ச்சைக்குரிய கருத்துகளைக் கூறி கட்டுரை வெளியிட்டதற்காக இந்தி நாளிதழ் ஒன்று எரிக்கப்பட்டதாக செய்திகள் வெளியாகின. ஆனால் ஷோயப் மாலிக் சர்ச்சைக்குரிய விதத்தில் எதுவும் கூறிவிடவில்லை. விராட் கோலி ஸ்பின் ஆடுவதில் அவரிடம் உள்ள உத்தி ரீதியான பலவீனம் பற்றியே 'குழு விவாதம்' ஒன்றில் தன் கருத்தை முன் வைத்தார். கோலி மட்டுமல்ல பாபர் அசாம் உள்ளிட்ட வீரர்களுக்கும் இத்தகைய பலவீனம் உண்டு என்றும் அவர் கருத்து தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து கோபாவேசமடைந்த கோலி ரசிகர்கள் சமூக ஊடகங்களில் ஷோயப் மாலிக் மீது தம் கோபதாபங்களையும் வசைகளையும் கேலி, கிண்டல்களையும் வெளிப்படுத்தினர். அதில் ஒருவர் குறிப்பாக, 'விராட் கோலிக்கு பேட்டிங் சொல்லிக் கொடுத்து விட்டாய் அடுத்து அமிதாப் பச்சனுக்கு நடிப்பு சொல்லித்தா' என்ற ரீதியில் கிண்டல் செய்திருந்தார்.

இதைக் குறிப்பிட்டு ஷோயப் மாலிக்கிடம் ரியாக்ஷன் கேட்ட போது முதலில் இந்தக் கருத்த்துக்கு அவர் உடனே சிரித்திருக்கிறார். பிறகு அவர் பதிலளிக்கையில், "ஒரு லட்சம் ரன்களை எடுத்திருந்தாலும் பலவீனம் எதுவுமே இல்லாத ஒரு வீரர் கூட உலகில் இல்லை" என்று பதிலளித்தார்.

'தி பெவிலியன்' என்ற கிரிக்கெட் நுணுக்கங்கள் பற்றிய அந்த குழு விவாதத்தில் வாசிம் அக்ரம், மிஸ்பா உல் ஹக், ஆகியோர் கோலி ஏன் ஸ்பின் பந்துக்கு எதிராக திணறுகிறார் என்பதை அவரது கால் நகர்த்தலில் உள்ள கோளாறுகளை வைத்து விவாதம் நடைபெற்றது. அதில் ஷோயப் மாலிக், "கோலி, பாபர் அசாமின் வலது கால் ஸ்பின்னர் வீசும் போது முன்னால் குறுக்காக கொண்டு வரப்பட்டு ஆடுகின்றனர்.

இது பந்து உள்ளே வரும்போது அவர்களுக்கு பெரும் பிரச்சனைகளைக் கொடுக்கிறது. நான் அவருக்கு அதை ஆடத்தெரியவில்லை என்று கூறவில்லை, மாறாக அவர் கொஞ்சம் திணறுகிறார் என்பதைத்தான் கூறுகிறேன். இந்த ஒட்டுமொத்த ஷோ-வையும் ஒழுங்காகப் பார்த்தால் கோலியை நான் எவ்வளவு புகழ்ந்திருக்கிறேன் என்பதும் 'உலகின் கிரேட்களில் அவர் ஒரு வீரர்' என்று கூறியிருக்கின்றேன்.

ஆஃப் ஸ்பின்னரை ஆடும்போது கோலி, பாபர் அசாம் கொஞ்சம் தடுமாறுவது அவர்கள் முன் காலை குறுக்காகக் கொண்டு வந்து ஆடுவதுதான். விராட் கோலி இந்த நெருக்கடியை ஆக்ரோஷமாக ஆடுவதன் மூலம் களைந்துகொள்கிறார், ஆனால் பாபர் அசாம் அப்படிச் செய்வதில்லை. அப்படி ஆக்ரோஷமாக பாபர் ஆடும்போது அவரும் இந்த சிக்கலிலிருந்து விடுபட வாய்ப்பு கிடைக்கும்" என்றார் ஷோயப் மாலிக்.

ஒரு வீரராக இன்னொரு வீரரின் பலவீனங்களைச் சுட்டுவதும் அதை அந்த குறிப்பிட்ட வீரருமே கேட்டுக் கொள்வதும், அதன் படி நடப்பதும் கிரிக்கெட் உலகின் மிக சகஜமான விஷயம், சச்சின் டெண்டுல்கர் பேட்டிங் கிரிப் இப்படி இருந்தால் டென்னிஸ் எல்போ வராது என்று சச்சின் தங்கும் 5 நட்சத்திர விடுதியில் வேலை செய்பவர் ஒருவர் கூறியதை சச்சின் டெண்டுல்கரே விதந்தோதி அவர் கூறியதை அங்கீகரித்து மாற்றிக் கொண்டதை சச்சின் டெண்டுல்கரே கூறியுள்ளார். அதே போல்தான் விராட் கோலியும் டெக்னிக்கலாக யார் எதைக்கூறினாலும் அதைச் சீர்தூக்கிப் பார்த்து மாற்றிக் கொள்ள முயற்சி செய்பவர்தான். ஆனால் நாயக வழிபாட்டுக் கூட்டம் கறைபடியாத வீரர், தவறுகளே இல்லாத வீரர் என்பதைக் கற்பனையாகக் கட்டமைத்துக் கொண்டு சரியான விமர்சனங்களை வைப்பவர்களையும் வசைமாரியில் இறங்குவது ஆரோக்கியமான பண்பாடல்ல.

## வரலாறு சினிமா

# மிஷ்கின் ஒரு ஓநாய் மேடையை அதிரவிட்ட இயக்குநர் பாலா

**சென்னை : நவ. 5,**

**'டெவில்' படத்தின் இசை மற்றும் டிரெய்லர் வெளியீட்டு விழாவில் இயக்குநர் மிஷ்கினை ஓநாய் என குறிப்பிட்டுள்ளார் இயக்குநர் பாலா.**





இயக்குநர் ஆதித்யா இயக்கத்தில் இயக்குநர் மிஷ்கின் இசையமைப்பாளராக அறிமுகமாகும் படம் 'டெவில்'. இதன் இசை வெளியீட்டு விழாவில் இயக்குநர்கள் வெற்றிமாறன், பாலா, அருண் மாதேஸ்வரன் எனப் பலரும் கலந்து கொண்டனர். இதில் இயக்குநர் பாலா பேசும் போது, "நான் என் படத்தின் பாடல் ஒலிப்பதிவிற்காக இளையராஜாவிடம் போயிருந்தேன். அப்பொழுது இளையராஜா மிஷ்கினைப் பற்றி சொன்ன ஒரு விசயம் எனக்கு ஞாபகம் வருகிறது.

அப்பொழுதெல்லாம் எனக்கு மிஷ்கின் யார் என்றே தெரியாது. அவர் எடுத்த படத்தைப் பற்றியும் தெரியாது. ஒரு ஷார்ட்ஸ் அதற்கு சம்பந்தமே இல்லாத ஒரு ஷூ மற்றும் டீ-சர்ட் போட்டுக் கொண்டு, துறுதுறுவென அங்கும் இங்கும் ஓடிக் கொண்டே இருந்தார் ஒருவர்.

அவர் போனதும், அவர் யார் என்று கேட்டேன். அதற்கு இளையராஜா, 'அவன் தான் மிஷ்கின். அவனை சாதாரணமாக நினைத்துக் கொள்ளாதே அவன் மிகப்பெரிய அறிவாளி என்று கூறினார். அவனைப் பார்க்கும் போது ஒரு டெவில் போலத்தான் இருக்கிறான். நான் என்னுடைய போனில் அவன் நம்பரைக் கூட ஓநாய் (Wolf) என்றுதான் பதிவு செய்து வைத்துள்ளேன்.

'வணங்கான்' படத்தில் உதவி இயக்குநராக இல்லை, இயக்குநராகவே நடித்துள்ளான். அவன் நடிக்கின்ற காட்சியை அவனையே இயக்கச் சொல்லிவிட்டேன். அது சிறப்பாக வந்திருக்கிறது என்று ஓகே சொல்லிவிட்டேன். ஆனால் மிஷ்கின், நீங்கள் மீண்டும் ஒரு முறை ஓகே வா என்று பார்த்து சொல்லுங்கள் என்றான். அதில் உள்ள ஒரு சிறுபிழையை நான் கவனிக்காமல் விட்டுவிட, மிஷ்கின் தான் அதைப் பார்த்து சொன்னான். நாம் எப்படி அதை தவறவிட்டோம் என்று யோசித்துக் கொண்டே இருந்தேன். உண்மையாகவே மிஷ்கினுக்கு முன்னால் நான் ஒன்றுமே இல்லை" என்று தெரிவித்தார்.

# தமிழுக்கு வருகிறார் ஆனந்த் தேவரகொண்டா

**சென்னை : நவ. 5,**

**இயக்குநர் சாய் ராஜேஷ் நீலம் இயக்கத்தில் விஜய் தேவரகொண்டாவின் தம்பி ஆனந்த் தேவரகொண்டா நாயகனாக நடித்து வெளியான தெலுங்கு படம் 'பேபி'.**

இப்படம் ரூ.10 கோடி பட்ஜெட்டுக்குள் உருவாகி கடந்த ஜூலை 14ம் தேதி வெளியான இப்படம் ரூ.90 கோடி வரை வசூலித்து வெற்றியடைந்தது. விஜய் தேவரகொண்டாவுக்கு 'அர்ஜுன் ரெட்டி' கைகொடுத்தது போல் ஆனந்த் தேவரகொண்டாவுக்கு 'பேபி' பெரிய வரவேற்பை கொடுத்தது.

'பேபி' படத்தின் தமிழ் ரீமேக் உரிமையை ஞானவேல்ராஜாவின் ஸ்டூடியோகிரீன் நிறுவனம் பெற்றுள்ளது. தமிழில் இளம் நடிகர் ஒருவர் இதில் நாயகனாக நடிக்க இருப்பதாகவும், இது தொடர்பான அதிகாரப்பூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்றும் கூறப்படுகிறது. இந்நிலையில் ஸ்டுடியோ கிரீன் தயாரிக்கும் மற்றொரு படத்தில் ஆனந்த் தேவரகொண்டா ஹீரோவாக நடிக்கிறார். இப்படம் தமிழ், தெலுங்கில் உருவாகிறது.



இப்படத்துக்கு 'டுயட்' என தலைப்பு வைத்துள்ளனர். ஏ.ஆர்.முருகதாசின் உதவி இயக்குனர் மிதுன் கிருஷ்ணன் இயக்குகிறார். ரித்திகா நாயக் ஹீரோயினாக நடிக்கிறார்.

# நடிகை சமந்தா நீராவிக் குளியல் புகைப்படம் வைரல்

**ஹைதராபாத் : நவ. 5,**

**நடிகை சமந்தா தான் கிரையோதெரபி எடுக்கும்படியான புகைப்படம் ஒன்றை தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பகிர்ந்துள்ளார்.**



தமிழ், தெலுங்கில் முன்னணி நடிகையான சமந்தா மையோசிடிஸ் எனும் தசை அழற்சி நோயால் பாதிக்கப்பட்டுள்ளார். இதற்காக தீவிர சிகிச்சை எடுத்து வரக்கூடிய சமந்தா சினிமாவுக்கு ஆறுமாத காலம் பிரேக் எடுத்துள்ளார்.

அமெரிக்காவில் சிறிது காலம் சிகிச்சை எடுத்தவர் தற்போது ஹைதராபாத்தில் இருக்கிறார். தன்னுடைய துணி பிசினஸ், இதர நிகழ்ச்சிகள், தீவிர உடற்பயிற்சி போன்றவற்றில் கவனம் செலுத்தி வரக்கூடிய சமந்தா அவ்வபோது தன்னுடைய சிகிச்சை முறைகளையும் இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவிடுவது வழக்கம்.

அந்த வகையில் சமந்தா தற்போது கிரையோதெரபி சிகிச்சை எடுத்து வருவது போன்ற புகைப்படத்தை பகிர்ந்து, 'குணமாகி வருகிறேன்' எனக்கூறியுள்ளார். நீராவிக் குளியல் எடுப்பது போல இருக்கும் சமந்தாவின் இந்தப் புகைப்படத்தை ரசிகர்கள் வைரலாக்கி வருவதுடன், அவருக்கு ஆறுதல் கூறி வருகின்றனர்.

# 'ரெய்டு' குறித்து இயக்குநர் முத்தையா



**சென்னை : நவ. 5,**

**''மண் சார்ந்த படங்களை எடுத்த என்னிடம் சிட்டி சார்ந்த கதைகளை எடுப்பேனா என என்னிடமே பலர் கேட்டனர்" என இயக்குநர் முத்தையா பேசியுள்ளார்.**

விக்ரம் பிரபு நடிப்பில், இயக்குநர் முத்தையா வசனத்தில் அறிமுக இயக்குநர் கார்த்திக் இயக்கத்தில் ஆக்ஷன் த்ரில்லர் படமாக உருவாகியுள்ள 'ரெய்டு' திரைப்படம் தீபாவளி வெளியீடாக நவம்பர் 10ம் தேதி வெளியாகிறது. இதன் இசை மற்றும் டிரெய்லர் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடந்தது.

இதில் கலந்து கொண்ட இயக்குநரும் இந்தப்படத்தின் வசனகர்த்தாவுமான முத்தையா பேசியிருப்பதாவது, "'கொம்பன்', 'மருது' போன்ற மண் சார்ந்த படங்களை முடித்துவிட்டு சிட்டி சார்ந்த ஒரு கதை எடுப்போம் என நினைத்திருந்தேன்.

ஆனால், பலரும் நான் அதுபோல சிட்டி சார்ந்த கதைகளை எடுப்பேனா என என்னிடமே கேட்டனர். அந்த நம்பிக்கையை என் மீது உருவாக்க வேண்டும் என்பதற்காகவே 'ரெய்டு' படத்தின் ஒரிஜினல் ரீமேக் உரிமையை நான் வாங்கினேன்.

அந்த சமயத்தில் 'டாணாக்காரன்' நல்ல ரீச் இருந்தபோது விக்ரம் பிரபு சாரிடம் படம் காட்டி கேட்டேன். அவரும் ஒத்துக் கொண்டார். என் பெயருக்காக இதில் பல பேர் வந்திருப்பது மகிழ்ச்சி. 'ரெய்டு' படம் நன்றாக வந்திருக்கிறது. தீபாவளிக்கு நல்லபடியாக வெற்றி பெற வேண்டும்" என்றார்.

நடிகர் கண்ணன் பொன்னையா பேசும்போது, "சூர்யாவுக்கு 'காக்க காக்க' போல, விக்ரமுக்கு 'சாமி' போல, விக்ரம் பிரபுவுக்கு 'ரெய்டு' போலீஸ் படங்களில் ஒரு பிராண்டாக அமையும்" என்றார்.



வரலாறு உலகம்

# காசாவில் ஆம்புலன்ஸ்களையும் தாக்கிய இஸ்ரேல்

## 15 பேர் மரணம், 60 பேர் காயம்





**காசா : நவ. 5,**

**இஸ்ரேல் ராணுவம் காசாவில் உள்ள அல்-ஷிபா மருத்துவமனையின் முன்புறமிருந்த அவசர ஊர்திகள் மீதும் தாக்குதல் நடத்தியுள்ளது. இந்த தாக்குதலில் 15 பேர் கொல்லப்பட்டுள்ளனர், 60 பேர் காயமடைந்துள்ளனர்.**

அல் - ஷிபா மருத்துவமனையிலிருந்து அவசர ஊர்திகளின் மூலமாக மோசமான நிலையில் உள்ள நோயாளிகள், ராபா எல்லை வழியாக எகிப்துக்கு அழைத்து செல்லப்படவிருந்ததாகக் காசா அமைச்சகம் தெரிவித்துள்ளது. “ஒட்டுமொத்த உலகத்துக்கும் நாங்கள் சொல்ல விரும்புகிறோம். இவை மருத்துவ அவசர ஊர்திகள் தான்” என்று பேசியுள்ளார் காசாவின் சுகாதார அமைச்சகத்தின் செய்திதொடர்பாளர் அஷ்ரப் அல்-குத்ரா.

மருத்துவ அவசர ஊர்திகள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட இடத்தைச் சுற்றி ஏராளமான பொதுமக்கள் இருந்ததாகவும் தெரிகிறது. இஸ்ரேல் ராணுவம், தங்களின் போர் விமானம் இந்த தாக்குதலை நடத்தியதை உறுதி செய்துள்ளது.

போர் தீவிரமடைந்துள்ள பகுதியில் இந்த வாகனங்களை ஹமாஸ் பயன்படுத்தியதைக் கண்டறிந்ததாகவும், அதனாலே தாக்குதல் நடத்தியதாகவும் இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது. மேலும், ஹமாஸ் தங்களின் வீரர்கள் மற்றும் ஆயுதங்களை இடம் மாற்ற அவசர ஊர்திகளைப் பயன்படுத்துவதாகவும், இந்தத் தாக்குதலில் ஹமாஸ் போராளிகள் கொல்லப்பட்டதாகவும் தெரிவித்துள்ளது இஸ்ரேல் ராணுவம்.

காசாவின் மிகப் பெரிய மருத்துவமனைகளில் ஒன்றான அல்-ஷிபா மருத்துவமனை தற்போது கூட்ட நெரிசலால் கடும் நெருக்கடியை சந்தித்து வருகிறது. காசாவின் பெரும்பாலான மருத்துவமனைகள் முடங்கியுள்ள நிலையில் இந்த மருத்துவமனையும் போதிய மருத்துவ வசதி வழங்க இயலாது திணறி வருகிறது.

‘’எரிபொருள் பற்றாக்குறையால் காசாவில் காயமுற்றவர்கள் மற்றும் நோயாளிகளின் உயிருக்கு உடனடி அபாயம் ஏற்படும்” என உலக சுகாதார நிறுவனம் எச்சரித்துள்ளது. இஸ்ரேலின் தாக்குதலில் இதுவரை பலியான பாலஸ்தீனர்கள் எண்ணிக்கை 9,200. மேலும், காயமுற்றவர்கள் எண்ணிக்கை 23,500 என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில் தற்காலிக போர் நிறுத்தம் என்கிற பேச்சுக்கே இடமில்லை என இஸ்ரேல் பிரதமர் திட்டவட்டமாக மறுத்துள்ளார்.

# நேபாள நிலநடுக்க பலி 150 ஆக அதிகரிப்பு மீட்பு, நிவாரணப் பணிகள் தீவிரம்



**காத்மாண்டு : நவ. 5,**

**நேபாள நாட்டில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நள்ளிரவில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால் கட்டிட இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 150 ஆக அதிகரித்துள்ளது. பலர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.**

நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டப் பகுதிகளில் மீட்புப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இடிபாடுகளில் இன்னும் பலர் சிக்கியிருக்கலாம் என அஞ்சுவதாகவும் பலி எண்ணிக்கை அதிகரிக்கலாம் எனவும் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ள மீட்புக் குழுவினர் தெரிவிக்கின்றனர். வீடுகளை இழந்தோர் நிவாரண முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

நேபாளத்தின் மேற்குப் பகுதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நள்ளிரவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. சுமார் 1 நிமிடத்துக்கு மேல் நிலநடுக்கம் உணரப்பட்டதாக தெரிகிறது. இது ரிக்டர் அளவுகோலில் 6.4 ஆக பதிவானது. நிலநடுக்கம் ஜாஜர்கோட் பகுதியில் லாமிடண்டா எனுமிடத்தில் மையம் கொண்டிருந்ததாக தேசிய நிலநடுக்க அளவீடு மையம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் நேபாள நாட்டின் பிரதமர் புஷ்ப கமல் தாஹல், நாட்டின் முப்படைகளும் மீட்பு, நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுத்தப்பட்டுள்ளன என்று கூறியுள்ளார். ஜாஜர்கோட்டுடன் தைலேக், சல்யான் மற்றும் ரோல்பா மாவட்டங்களிலும் பாதிப்பு அதிகமாக இருப்பதாக உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. கடந்த 30 நாட்களில் மூன்றாவது முறையாக நேபாளத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஏற்பட்ட நிலநடுக்கத்தின் தாக்கம் இந்தியத் தலைநகர் டெல்லி உள்பட நொய்டா, பாட்னா ஆகிய நகரங்களிலும் உணரப்பட்டது.

இமாலய மலையில் அமைந்துள்ள பகுதிகளில் நிலநடுக்கம் ஏற்படுவது வழக்கமானதாகவே இருக்கின்றது. அந்த வகையில் நேபாளத்திலும் அவ்வப்போது நிலநடுக்கங்கள் ஏற்படுவதுண்டு. கடைசியாக கடந்த 2015 ஆம் ஆண்டு 7.8 ரிக்டர் அளவில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தில் சிக்கி 12 ஆயிரம் பேர் உயிரிழந்தனர். 10 லட்சம் கட்டிடங்கள் தரைமட்டமாகின என்பது நினைவுகூரத்தக்கது.

பிரதமர் மோடி தன்னுடைய எக்ஸ் தளத்தில், “நேபாளத்தில் நிலநடுக்கத்தால் ஏற்பட்டுள்ள இழப்புகளை அறிந்து மனவேதனை அடைந்தேன்; நேபாளத்துக்கு இந்தியா துணை நிற்கும்; நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்ய தயாராக உள்ளோம்” எனத் தெரிவித்துள்ளார். அவசர உதவி கோரும் இந்தியர்களுக்காக +977-9851316807 என்ற ஹெல்ப்லைன் எண்ணை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.

# பாகிஸ்தானில் புலியுடன் வாக்கிங் செல்லும் சிறுவன்



**இஸ்லாமாபாத் : நவ. 5,**

**சிறுவன் யார் என்பதை யூடியூபர் நௌமன் ஹசன் தெரிவிக்கவில்லை. எனினும், அது ஹசனின் மருமகன் என சில பயனர்கள் குறிப்பிட்டனர்.**

பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்த பிரபல யூடியூபர் நௌமன் ஹசன், சமீபத்தில் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் ஒரு வீடியோவை பதிவிட்டார். அந்த வீடியோவில், சிறுவன் ஒருவன் புலியை வீட்டுக்குள் வாக்கிங் அழைத்துச் செல்கிறான். புலியின் கழுத்தில் கட்டப்பட்ட சங்கிலியை பிடித்துக்கொண்டு புலியின் பின்னால் அந்த சிறுவன் தைரியமாக செல்கிறான். இது பார்ப்பவர்களை அதிர்ச்சி அடைய வைத்தது.

இந்த வீடியோவை பார்த்த சிலர் சிறுவனின் தைரியத்தை பாராட்டி கருத்து பதிவிட்டனர். சிலர், கோபத்துடன் கருத்துகளை தெரிவித்தனர். சிறுவனை இவ்வாறு செய்ய வைத்தது அபத்தமானது என்றும் திட்டியுள்ளனர். அந்த சிறுவன் யார் என்பதை யூடியூபர் நௌமன் ஹசன் தெரிவிக்கவில்லை. எனினும், அது ஹசனின் மருமகன் என சில பயனர்கள் குறிப்பிட்டனர்.

இதே சிறுவன் இதற்கு முன்பு ஒரு கார் ஷோரூமுக்குள் மற்றொரு புலியுடன் நடந்து செல்லும் சிறு வீடியோ கிளிப்பை ஹசன் வெளியிட்டிருந்தார். ஏராளமான விலங்குகளை பராமரித்து செல்லப் பிராணிகளாக வளர்த்து வரும் ஹசன், அந்த விலங்குகளுடன் புகைப்படம் மற்றும் வீடியோக்களை எடுத்து வெளியிடுகிறார். கடந்த ஆண்டு லாகூர் சபாரி உயிரியல் பூங்காவில் இருந்து ஏலத்தில் வாங்கிய புலிகளையும் தனது செல்லப்பிராணிகளாக வளர்த்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தான் விமான நிலையத்தில் தீவிரவாதிகள் தாக்குதல்

## — ராணுவ பதிலடியில் மூவர் பலி —



**மியான்வலி : நவ. 5,**

**பாகிஸ்தானின் பஞ்சாப் மாநிலத்தில் உள்ள மியான்வலி விமானப்படை தளத்தின் மீது நேற்று வெடிகுண்டு தாக்குதல்கள் நடத்தப்பட்டன. ராணுவத்தினர் நடத்திய எதிர் தாக்குதலில் 3 தீவிரவாதிகள் உயிரிழந்ததாக பாகிஸ்தான் விமானப்படை தெரிவித்துள்ளது.**

இதுகுறித்து பாகிஸ்தான் ராணுவம் வெளியிட்டுள்ள அறிக்கையில், நேற்று அதிகாலையில் பாகிஸ்தான் விமான படைக்குச் சொந்தமான மியான்வலியில் உள்ள விமான பயிற்சி தளம் தீவிரவாதிகளால் தாக்குதலுக்கு உள்ளானது. ஐந்து அல்லது ஆறு பேர் கொண்ட ஆயுதம் தாங்கிய குழு ஒன்று இந்தத் தாக்குதலை நடத்தியது. இந்தத்தாக்குதல் ராணுவத்தினரின் சரியான பதிலடியால் முறியடிக்கப்பட்டது.

மேலும் விமானதளத்தில் உள்ளவர்கள் மற்றும் அங்கிருந்த சொத்துக்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. தக்க சமயத்தில் ராணுவத்தினர் நடத்திய துணிச்சலான எதிர் தாக்குதலால் தீவிரவாதிகளில் விமான நிலையத்துக்குள் நுழைவதற்கு முன்பாகவே அவர்களில் 3 பேர் கொல்லப்பட்டனர்.மூன்றுபேர் விரட்டியடிக்கப்பட்டுள்ளனர்” என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

மேலும் இந்தத் தாக்குதலால் விமான தளத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மூன்று விமானங்கள் சேதமடைந்துள்ளன. எரிபொருள் டேங்கரும் பாதிப்படைந்துள்ளது என்றும் ராணுவம் தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலுக்கு பாகிஸ்தானை அடிப்படையாகக் கொண்ட தெஹ்ரீக்-இ-ஜிஹாத் பாகிஸ்தான் (டிஜெபி) என்ற அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. இந்தத்தாக்குதல் குறித்த சில வீடியோக்கள் சமூக வலைதளங்களில் பகிரப்பட்டு வருகின்றன. ஆனால் அவற்றின் உண்மைத்தன்மை இன்னும் உறுதி செய்யப்படவில்லை.

# அமெரிக்கா நிச்சயம் அழிந்துபோகும் எதிரிகள் ஒன்றுசேருவோம்

## ஹமாஸ் பகிரங்க எச்சரிக்கை



**காசா : நவ. 5,**

**இஸ்ரேல் மற்றும் ஹமாஸுக்கு இடையேயான சண்டை தொடரும் நிலையில், ஹமாஸின் மூத்த தளபதி ஒருவர் நேரடியாக அமெரிக்காவுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

கடந்த மாதம் 7ம் தேதி இஸ்ரேலைக் குறிவைத்து ஹமாஸ் பயங்கரவாதிகள் அதிரடி தாக்குதலை நடத்தினர். முதலில் 20 நிமிடங்களில் பல ஆயிரம் ஏவுகணைகளை வீசிய அவர்கள், தொடர்ந்து இஸ்ரேலுக்குள் நுழைந்தும் சரமாரியாகச் சுட்டுத் தள்ளினர். இதில் பலர் உயிரிழந்தனர்.

இதற்குப் பதிலடி கொடுக்கும் நடவடிக்கையில் இஸ்ரேல் இறங்கியது. காசா மீது தொடர்ச்சியாக ஏவுகணை தாக்குதல்கள் நடத்தப்பட்டன. மேலும், காசா மீதான தரைவழியாகத் தாக்குதல்களையும் இஸ்ரேல் தீவிரப்படுத்தியுள்ளது. இதனால் அங்கே பதற்றமான சூழல் நிலவி வருகிறது.

இஸ்ரேல் ஹமாஸ் இடையே மோதல் தொடரும் நிலையில், ஹமாஸின் மூத்த தளபதிகளில் ஒருவரான அலி பராக்கா நேரடியாக அமெரிக்காவுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார். கடந்த காலங்களில் சோவியத் ஒன்றியம் எப்படி அழிந்து போனதோ, அதேபோல அமெரிக்காவும் நிச்சயம் ஒரு நாள் அழியும் எனறு அவர் எச்சரித்துள்ளார். கடந்த நவம்பர் 2ம் தேதி லெபனான் யூடியூப் சேனலுக்கு அளித்த பேட்டியில் அலி பராக்கா இந்த கருத்துக்களைக் கூறியிருக்கிறார்.

அவர் அந்த பேட்டியில், “அமெரிக்கா என்பது பிரிட்டன் மற்றும் உலகளாவிய ஃப்ரீமேசன்ரி இணைந்து உருவாக்கப்பட்டதுதான். அது சோவியத் ஒன்றியம் செய்தது போல் நிச்சயம் வீழ்ந்துவிடும். அமெரிக்காவின் அனைத்து எதிரிகளும் ஆலோசனையில் ஈடுபடுகிறார்கள். அவர்கள் அனைவரும் நெருங்கி வருகிறார்கள். அவர்கள் போரில் ஒன்றாகச் சேரும் நாள் விரைவில் வரலாம். அப்போது அமெரிக்கா என்பது கடந்த காலமாக மாறும்.

அப்போது அமெரிக்கா சக்திவாய்ந்ததாக இருக்காது.. இப்போதே பார்த்தீர்கள் என்றால் அமெரிக்காவை வட கொரியா மிகவும் சூப்பராக கையாண்டு வருகிறது. இப்போது இருக்கும் உலக தலைவர்களிலேயே அமெரிக்காவைத் தாக்கும் திறன் கொண்ட தலைவர் என்றால் அது வட கொரியா தலைவர் ஒருவர் மட்டுமே. இது உங்களுக்கே தெரியும். அமெரிக்காவைத் தாக்கும் ஆயுதங்களும் வட கொரியாவிடம் உள்ளது. இந்த மோதலில் வட கொரியா தலையிடும் நாள் விரைவில் வரலாம், ஏனென்றால் வடகொரியாவும் எங்கள் கூட்டணியில் தான் இருக்கிறது.

எங்கள் ஹமாஸ் குழு சமீபத்தில் தான் ரஷ்யாவுக்குச் சென்றது. இன்று ரஷ்யாவுக்கும் எங்களுக்கும் இடையே தினசரி ஆலோசனை தொடர்ந்து நடக்கிறது. சீனா மற்றும் ரஷ்யா பிரதிநிதிகள் ஹமாஸ் தலைவர்களைச் சந்தித்தனர். அதேபோல ஹமாஸ் பிரதிநிதிகள் மாஸ்கோவிற்கு பயணம் செய்தனர். அடுத்த கட்டமாக ஒரு தூதுக்குழு சீனாவுக்கும் செல்ல உள்ளது.

அமெரிக்காவைத் தாக்கும் திறன் ஈரானுக்கு இல்லை. ஈரான் இந்த விவகாரத்தில் தலையிட முடிவு செய்தால், அப்பகுதியில் இருக்கும் அமெரிக்கத் தளங்களையும் மட்டுமே அவர்களால் தாக்க முடியும். அமெரிக்கா வரை சென்று தாக்கும் ஆயுதங்கள் ஈரானிடம் இல்லை. அதேநேரம் அமெரிக்காவால் இஸ்ரேலையும், அப்பகுதியில் உள்ள தளங்களையும் கப்பல்களையும் தாக்க முடியும் என்பது உண்மைதான்” என்று அவர் கூறினார்

மேலும், இப்போது நடந்து வரும் மோதல் எப்படிச் சென்றாலும் அதைச் சமாளிக்க ஹமாஸ் தயாராக இருப்பதாகவும், அதற்கேற்ப தாங்கள் திட்டமிட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். ஹமாஸ் வசம் அமெரிக்கர்கள் உட்படப் பல பிணையக் கைதிகள் இருக்கும் நிலையில், அவர்கள் குறித்து ஹமாஸ் தளபதி எந்தவொரு கருத்தையும் பகிரவில்லை.

## இந்தியாவில் பாரம்பரியமாக கொண்டாடப்படும்

# “கர்வாசவுத்” பண்டிகையை கொண்டாடிய அமெரிக்க பாடகி



**அமெரிக்கா : நவ. 5,**

**இந்திய கலாச்சாரத்தை பறைசாற்றும் வகையில் பாரம்பரியமாக கொண்டாடப்படும் சில பண்டிகைகள் வெளிநாட்டினரையும் கவர்ந்துள்ளது.**

அந்த வகையில் வட இந்தியாவில் திருமணமான பெண்கள் தனது கணவரின் நீண்ட ஆயுளுக்காக கொண்டாடும் ‘கர்வாசவுத்’ பண்டிகையை அமெரிக்காவில் புகழ் பெற்ற பாடகியான மேரிமில்பென் கொண்டாடிய காட்சிகளை தனது எக்ஸ்தளத்தில் பகிர்ந்து தனது ரசிகர்களை ஆச்சரியப்படுத்தியுள்ளார்.

இந்திய பாரம்பரிய உடையில் அலங்காரம் செய்த அவர் ஏராளமான நகைகள் அணிந்து ‘கர்வாசவுத்’ பண்டிகையை கொண்டாடிய புகைப்படத்துடன், அந்த பண்டிகையின் முக்கியத்துவத்தை விளக்கி பதிவிட்டுள்ளார். அதில் ‘கர்வாசவுத்’ பண்டிகை இந்திய கலாச்சாரத்தின் ஒரு அழகான பாரம்பரியத்தை கொண்டாடுகிறது. இதில் சமூக பிணைப்புகளை வலுப்படுத்தும் கொண்டாட்டமாகும் என குறிப்பிட்டுள்ளார். திருமணமாகாத மேரிமில்பென் தனது வருங்கால கணவருக்காக பிரார்த்தனை செய்து பண்டிகையை கொண்டாடி உள்ளார்.

# இரண்டாம் முறை அமெரிக்கா அதிபரானால்

## டிரம்பின் அஜெண்டா–47





**அமெரிக்கா : நவ. 5,**

**அமெரிக்காவில் அடுத்த வருடம் அதிபர் தேர்தல் நடைபெற உள்ளது. ஆளும் ஜனநாயக கட்சியை சேர்ந்த அதிபர் ஜோ பைடனுக்கு எதிராக முன்னாள் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் (77) தீவிரமாக களம் இறங்கி உள்ளார். மீண்டும் அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டால் அமெரிக்காவின் 47-வது அதிபராக டிரம்ப் பதவி வகிப்பார்.**

அதிபர் தேர்தலில் வென்றால், நாட்டின் வளர்ச்சிக்காக டிரம்ப் எடுக்க போகும் முக்கிய நடவடிக்கைகளை ‘அஜெண்டா 47’ என அவரது ஆதரவாளர்கள் அழைக்கின்றனர். அதன்படி, தனது முந்தைய பதவி காலத்தில் தனது திட்டங்களுக்கு நீதிமன்றங்களும், அதிகாரவர்க்கமும் தடையாய் இருந்ததாக கருதும் டிரம்ப், இம்முறை அவ்வாறு நடைபெறாமல் இருக்க முன்னெச்சரிக்கையாக தயார் செய்து வருவதாகவும் அவரது ஆதரவாளர்கள் கூறுகின்றனர்.

நகரங்களில் வீடில்லாமல் சாலையில் வசிப்பவர்களை அமெரிக்க நகரங்களுக்கு வெளியே குடியமர்த்துவது, தேசபக்தி உள்ள ஆசிரியர்களையே கல்வி நிறுவனங்களில் வேலைக்கு அமர்த்துவது, அனைத்து இறக்குமதிகளுக்கும் ஒரு உலகளாவிய அடிப்படை கட்டணத்தை நிர்ணயிப்பது, ஆவணங்கள் இல்லாமல் அமெரிக்காவிற்குள் நுழையும் மெக்சிகோ நாட்டினரை மீண்டும் அந்நாட்டிற்கே திருப்பி அனுப்பி வைப்பது, சட்டவிரோதமாக அமெரிக்காவில் நுழைந்த தம்பதியினருக்கு பிறக்கும் குழந்தைகளுக்கு குடியுரிமை வழங்குவதை ரத்து செய்வது, ரஷியாவுடன் போரில் ஈடுபட்டு வரும் உக்ரைனுக்கான பல கோடி மதிப்பிலான உதவிகளை நிறுத்துவது, எரிசக்திக்கான விலையை குறைக்க நடவடிக்கை எடுப்பது மற்றும் அரசுக்கு எதிராக செயல்படும் அரசாங்க அதிகாரிகளை உடனடியாக பணி நீக்கம் செய்வது என பல அதிரடி நடவடிக்கைகள் இந்த ‘அஜெண்டா 47’ மூலம் எடுக்கப்படும் என தெரிய வந்துள்ளது.

அமெரிக்க வளர்ச்சியை மட்டுமே முன்னிறுத்தி குடியரசு கட்சியை சேர்ந்த டிரம்ப் வகுக்கும் இந்த திட்டங்களுக்கு ஜனநாயக கட்சியிலும் ஒரு சிலர் ஆதரவு அளிப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. டிரம்ப் மீது அமெரிக்காவின் பல்வேறு மாநிலங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள கிரிமினல் வழக்குகளில் வரும் தீர்ப்பை பொறுத்தே அவர் அதிபராவது முடிவு செய்யப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

# ரஷிய கட்டுப்பாட்டில் உள்ள கெர்சன் நகர் மீது உக்ரைன் ஏவுகணை தாக்குதல் : 6 பேர் உயிரிழப்பு



**ரஷியா : நவ. 5,**

**உக்ரைன் மீது ரஷியா தாக்குதல் நடத்த தொடங்கி 2 ஆண்டுகளை நெருங்கிவிட்டது. ஆனாலும் இன்னும் போர் முடிவுக்கு வரவில்லை.**

இந்த சண்டையின் போது தெற்கு உக்ரைனில் உள்ள கெர்சன் நகரை ரஷிய படைகள் கைப்பற்றியது. இந்த நகரை மீட்க உக்ரைன் வீரர்கள் தொடர்ந்து போரிட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் ரஷிய ஆக்கிரமிப்பில் உள்ள கெர்சன் சாப்சின்கா வேலை வாய்ப்பு மையத்தில் உக்ரைன் ஏவுகணைகளை வீசி தாக்குதலில் ஈடுபட்டது. இதில் 6 பேர் உயிர் இழந்தனர். பலர் படுகாயம் அடைந்தனர். அவர்கள் சிகிச்சைக்காக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# கொலம்பியாவில் ஏழை சிறுவனின் பிறந்தநாளை கொண்டாடிய பள்ளி மாணவர்கள்



**கொலம்பியா : நவ. 5,**

**பிறந்த நாள் கொண்டாட்டங்கள் வாழ்நாளில் மறக்க முடியாது. குறிப்பாக பள்ளி செல்லும் குழந்தைகள் பிறந்தநாளன்று புதிய ஆடை அணிந்து பள்ளிக்கு சென்று சக மாணவ-மாணவிகளுக்கும், ஆசிரியர்களுக்கும் இனிப்பு கொடுத்து கொண்டாடுவது அவர்களுக்கு மிகுந்த உற்சாகத்தை ஏற்படுத்தும். ஆனால் இவையெல்லாம் ஏழை மாணவர்களுக்கு நினைத்து பார்க்க முடியாததாகவே உள்ளது.**

இந்நிலையில் ஒரு ஏழை சிறுவனின் பிறந்த நாளை சக மாணவர்கள் பள்ளி வகுப்பறையில் கொண்டாடிய வீடியோ இணையத்தில் வைரலாக பயனர்களின் இதயங்களை கவர்ந்துள்ளது. கொலம்பியாவின் எபிஜிகோ பகுதியை சேர்ந்த சிறுவன் ஏஞ்சல் டேவிட். 8 வயதான இந்த ஏழை சிறுவன் இதுவரை பிறந்தநாளை கொண்டாடியது கிடையாது.

இந்நிலையில் அவனது 8-வது பிறந்தநாளை அறிந்த பள்ளி ஆசிரியர் காசாஸ் சிமெனா அந்த சிறுவனுக்கு இன்ப அதிர்ச்சி கொடுக்கும் வகையில் வகுப்பறையில் பிறந்தநாளை கொண்டாட திட்டமிட்டார்.

அதன்படி சிறுவன் டேவிட் வகுப்பறைக்கு வந்த போது சக மாணவர்கள் அவரை கைதட்டி, பிறந்தநாள் வாழ்த்து, பாட்டு பாடி வரவேற்றுள்ளனர். மேலும் வகுப்பறையில் பலூன்கள் கட்டி, அலங்காரம் செய்து சிறுவனின் பிறந்தநாளை கொண்டாடிய வீடியோ சமூக வலைதளங்களில் பகிரப்பட்டுள்ளது. 10 லட்சத்திற்கும் அதிகமான விருப்பங்களை பெற்ற இந்த வீடியோவை பார்த்த பயனர்கள் பலரும் சிறுவனின் ஆசிரியர் மற்றும் சக மாணவர்களை பாராட்டி கருத்துக்களை பதிவிட்டு வருகின்றனர்.



# நேபாள நிலநடுக்க பலி 150 ஆக அதிகரிப்பு மீட்பு பணிகள் தீவிரம்

# சென்னையில் மழைக்கு பதறும் காலம் மாறிவிட்டது திமுக ஆட்சியே காரணம்





# அமைதி ஒரு விருப்பமல்ல அதுதான் ஒரே வழி குடியரசு துணைத் தலைவர்


| சென்னை / புதுக்கோட்டை | 05.11.2023 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10 |
| --- | --- | --- | --- | --- |

புதுகை வரலாறு நாளிதழ்

புதுமை வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

சித்தரஞ்சன் தாஸ் , இந்திய அரசியல்வாதி (பி.1870) (இ.1925)



கா. சு. பிள்ளை , தமிழகத் தமிழறிஞர் (பி.1888) (இ.1945)



அர்ஜுன் சிங் , இந்திய அரசியல்வாதி (பி.1930) (இ.2011)



விராட் கோலி , இந்தியத் துடுப்பாளர் (பி.1988)



## இன்றைய நினைவு நாள்

சைமன் காசிச்செட்டி , இலங்கை தமிழறிஞர், அகராதியியலாளர், அரசியல்வாதி (பி.1807) (இ.1860)



கு. ப. சேது அம்மாள் , தமிழக எழுத்தாளர் (பி.1908) (இ.2002)



## உலக சுனாமி விழிப்புணர்வு நாள்